உ
சிவமயம்





# இறைபணி துலக்கும் ஆன்மிகக் கதைகள்



கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின்
வைரவிழா வெளியீடு

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இறைபணி துலக்கும் ஆன்மிகக் கதைகள்

கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின்

வைரவிழா வெளியீடு

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணி துலக்கும் ஆன்மிகக் கதைகள்

ஆக்கம் : கலாபூஷணம் மூ.சிவலிங்கம்
(ஓய்வுநிலை கிராம சேவையாளர்)

வெளியீடு : இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

முதற்பதிப்பு : புரட்டாதி, 2021

பதிப்புரிமை : நூலாசிரியருக்கு

கணினி வடிவமைப்பும்
மலர் அமைப்பும் : சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில்

பக்கங்கள் : x + 50

விலை : 150/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



இணுவில் திருவூரில் கடந்த அறுபதாண்டு காலமாக இயங்கி வரும் சைவத்திருநெறிக்கழகத்தின் வைரவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். வைரவிழாக் குறித்து மூதறிஞர் கலாபூஷணம் உயர்திரு.மூ.சிவலிங்கம் அவர்களின் "இறை பணி துலக்கும் ஆன்மிகக் கதைகள்" என்னும் அரிய நூல் வெளிவருவது பெருமைக்குரிய விடய மாகும். ஆயிரம் பிறை கண்ட பெரியார் திரு.மூ.சிவலிங்கம் ஐயா அவர்களின் அரிய ஆவணப்படுத்தல் முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது. தொடர்ந்து பல ஆக்கபூர்வமான அறிவுசார் நூல்களை வெளியிட்டு வரும் ஐயா அவர்கள் இலகு தமிழில் மாணவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் இவ்வரிய நூலை ஆக்கியுள்ளார். ஆன்மிகக் கதைகள் பிள்ளைகளை விரைவில் ஆற்றுப்படுத்தும் சக்தி மிக்கவை. சுவாமி இராமகிருஷ்ண பகவான் சிறுவர்களுக்கு கதைகள் மூலம் சொல்லும் செய்திகள் அவர்களின் மனத்தில் பசுமையாக நிலைத்து நிற்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மனித வாழ்வில் நூல்கள் ஆற்றுப்படுத்தும் சக்தி மிக்கவை. குறிப்பாக மனிதர்களை புனிதப்படுத்தக்கூடியவை ஆன்மிக நூல்கள். எனவே ஆன்மிகம் சார் நூல்கள் காலத்துக்குக் காலம் வெளிவர வேண்டியது அவசியமாகும்.

சேக்கிழார் சுவாமிகள் படைத்த பெரிய புராணம் திருத்தொண்டர் களின் வாழ்வின் மேன்மையை எடுத்துரைப்பவை. இன்று ஆலயங் களில் திருத்தொண்டர்களின் தொகை அருகிவரும் சூழலில் தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஊக்கப்படுத்தக்கூடிய வரலாற்றுக் கதைகளில் சிலவற்றைப் பெரியார் இந்நூலில் எடுத்துரைத்துள்ளமை மிகுந்த பொருத்தப்பாடு எனலாம்.

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற ஔவையாரின் கூற்றுக்கு அமைய திருத்தொண்டர் பெருமையை வளர்ப்போமாக.

இணுவில் சைவத்திருநெறிக் கழகம் சூரிய சந்திரர் உள்ளவரை சிறக்க வாழ்த்துவதோடு கலாபூஷணம் ஐயாவின் தூய பணி தொடர சிவகாமி அம்பாளை வேண்டி நல்லாசிகளைத் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**
**தலைவர்,**
**சிவபூமி அறக்கட்டளை,**
**இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாழ்த்துரை



இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரான கலாபூஷணம் மூ.சிவலிங்கம் அவர்களின் "இறைபணி துலக்கும் ஆன்மிகக் கதைகள்" எனும் இந்நூல் வெளியிடப் படுவதையிட்டும் - இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டும் மகிழ்வடைகின்றேன்.

இந்நூலில் கழகத்தின் வரலாற்றுப் பதிவுகளை நூலாசிரியர் சுருக்கமாக எழுதியுள்ளார். தற்கால இளைஞர்கள் சைவத்திருநெறிக் கழகத்தின் திருப்பணிகளை அறியவும் கழகத்தில் இணைந்து பணியாற்றவும் இது வழிவகுக்கும்.

நாயன்மார்கள் எண்மரின் வரலாறு சுருக்கமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்நூலாசிரியர் கிராமசேவை உத்தியோகத்தராக இருந்து ஓய்வு பெற்ற பின்னரே எழுத்துலகில் பிரவேசித்து 18 ஆண்டுகள் 31 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளமை வியப்பானது. இதற்கு சிவகாமி அம்பாளின் பேரருளே காரணமாகும்.

இவர் தனது 88ஆவது வயதில் தற்போது உடல்வலு சற்றுக் குறைந்த போதும் உளவலு நிறையக் கொண்டிருக்கின்றார். இவரது நற்பணி தொடர அம்பாளை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

**கெ.தவராசா**

**தலைவர்,**

**இணுவில் சைவத்திருநெறிக் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அறுபதாம் ஆண்டில் கால் பதிக்கும் இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் வரலாறும் அதன் செயற்பாடும்

இணுவில் கிழக்கு இளந்தாரி கோயில் சனசமூக நிலைய மண்டபத்தில் 1962ஆம் ஆண்டு பங்குனி மாதம் சைவத்திருநெறிக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இளந்தாரி கோயில் பூசகராக இருந்த சைவத்தொண்டர் அம்பலவாணர் (இராசா) காரைக்கால் அம்மையாரின் குருபூசையினை கோயில் மண்டபத்தில் ஆண்டு தோறும் செய்து வந்தார். இக்குருபூசை யுடன் சமய விழாக்களையும் ஒரு நிறுவனத்தினூடாக நடத்த விரும்பினார். அம்பலவாணரின் விருப்பின் பேரில் இளைஞர்களான (அமரர்கள்) தி.சி.சண்முகலிங்கம், கா.நடராசா மற்றும் கா.சச்சிதானந்தன், பெ.கனகசபாபதி, சி.நடராசா, செ.இலகுநாதன் ஆகியோர் ஒன்றுகூடி 1962 பங்குனியில் அமைந்த காரைக்கால் அம்மையாரின் குருபூசைத் தினத்தில் சைவத் திருநெறிக்கழகத்தை உருவாக்கினர். கழகத்தின் முதற்தலைவராக அம்பலவாணர் தெரிவு செய்யப்பட்டார். செயலாளர் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

சைவத்திருநெறிக்கழகம் தொடர்ந்து குருபூசைகளையும் சமய விழாக்களையும் நடாத்தி வந்தது. காலங்கள் செல்லவும் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையால் கழகத்தின் செயற்பாடுகள் நலிவடைந்தது. இணுவில் சிவகாமி அம்பாளின் திருப்பணிகளைச் செய்த சாத்திரம்மாவின் அழைப்பின் பேரில் அவரினால் குறிப்பிட்ட ஆலயப் பணிகளை எம்மவர் ஏற்றுத் தொண்டர்களாக உதவினர். மேலும் 1980 முதல் சிவகாமி அம்பாளின் தேர்த்திருவிழா அன்று நடைபெறும் அன்னதானப் பணியையும் எமது கழகம் ஏற்று 2016 வரை சிறப்பாக நடாத்தியது.

சைவத்திருநெறிக்கழகம் தமது பணிகளுடன் அறநெறிப் பாடசாலையொன்றை நிறுவவும் இறையருள் கைகூட்டியது. எமது சைவத்திருநெறிக்கழகத்தின் HA/4/J/196 இலக்கங் கொண்ட பதிவின் பேறாக அறநெறிப் பாடசாலையை எமது அனுசரணையுடன் தொடக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதம் தெரிவித்தோம். இதற்கமைவாக 1997 விஜயதசமியன்று எமது அன்னதானசபை மண்டபத்தில் இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை உதயமானது. சிவகாமி அறநெறிப்பாடசாலை அக்காலப் பகுதியில் வலி தெற்கு பிரதேச செயலாளராக இருந்த திரு.ஆ.மகாலிங்கம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சிவகாமி அறநெறிப்பாட சாலையை முன்னின்று அமைக்க உதவியவர் எமது கழக உறுப்பினர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம் ஆவார்.

சிவகாமி அறநெறிப் பாடசாலையைப் பொறுப்புடன் நடாத்திய மூ.சிவலிங்கம் அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகச் சமய நூல்களை வெளியிட முன்வந்தார். சிவகாமி அம்பாளின் பேரருளும் இவரின் சமய பக்தியும் கைகூடியதால் 2020 வரை 30 நூல்களை எழுதினார். யாவற்றையும் இணுவில் சைவத்திருநெறிக்கழகம் வெளி யிட்டது. இன்று இரு நூல்கள் வெளிவருகிறது. எம்மைச் சமய நெறியில் உருவாக்கிய சிவகாமி அம்பாளின் ஆலய வரலாற்றுப் பதிவு நூலும் விரைவில் வெளிவர உள்ளது.

இணுவில் பெரிய சந்நியாசியாரின் சமாதியடைந்த நூறாம் ஆண்டு முதல் தொடர்ந்து இன்றைய விழாவுடன் ஐந்தாவது விழாவாக 104ஆம் ஆண்டு நினைவாக காரைக்கால் சிவாலய வரலாற்று நூலும் இன்று வெளிவருவது இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் சிறப்பாக அமை கிறது. சிவலிங்கம் அவர்களின் சமயப் பணிக்கு இக்கழகத்தின் தலைவர் திரு.கெ.தவராசா அவர்களும் கழக நிர்வாக உறுப்பினர்களும் பெரும் உறுதுணையாக உள்ளனர்.

சைவத்திருநெறிக்கழகத்தின் சமய சமூகப் பணியும் கலாபூஷணம் மூ.சிவலிங்கம் அவர்களின் சமயப்பணியும் தொடர்ந்து எம்மண்ணுக்குக் கிடைக்க அருள் பாலிக்க வேண்டி எல்லாம் வல்ல எமது குலதெய்வமான சிவகாமி அம்பாளை வேண்டி வணங்குகிறேன்.

**பெ.கனகசபாபதி (ச.நீ)**
**சைவத்திருநெறிக்கழகத்தின்**
**ஆரம்பகால செயலாளரும்**
**தற்போதைய போசகரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நூல்முகம்



இணுவில் திருவூரின் சைவமும், தமிழும், கலைகளும் சிறப்புடன் துலங்க வைப்பதற்கென ஆரம்பிக்கப்பட்ட இணுவில் சைவத் திருநெறிக்கழகம் 2021-03-31இல் அறுபதாம் ஆண்டில் கால் பதிப்பது சிவகாமி அம்பாளின் பேரருளேயாகும். இதன் ஆரம்பகாலம் முதல் செயலாளராக இருந்து 1974 முதல் மேலும் எம்மிற் பலருடன் இணைந்து இன்று வரை காப்பாளராயிருந்து வரும் பெ.கனகசபாபதி (ச.நீ) அவர்களின் சிந்தனைக்கமைய இன்றைய விழாச் சிறப்பாக அமைகிறது.

சைவ உலகில் அரும்பணியாற்றிச் சைவத்தை வளர்த்த 63 நாயன்மாரின் சைவப்பணி யாவராலும் போற்றப்பட்டது. இப்பெரியார்களுள் பலர் அறப்பணிக்காகத் தம்மை அர்ப்பணித்தனர். இவர்களை அடியொற்றி சிவகாமி அம்பாளின் தொண்டர்களின் திருத்தொண்டினால் இவ்வாலயம் பிரபலமடைந்ததை நாம் யாவரும் அறிவோம். இப்பணிகளை அடியொற்றிய எமது கழகத்தினர் 1974 முதல் இன்றுவரை 48 வருட காலம் செய்த அறப்பணியின் விளைவே சைவத்திருநெறிக் கழகத்தின் சிறப்பாகும். இவை யாவற்றிற்கும் அடித்தளமிட்டது இவ்வாலயத்தின் திருத்தொண்டாகும். இத்திருத்தொண்டு என்றென்றும் தொடர வேண்டுமென்பதை எமது இளம் சந்ததியினருக்கு உணர்த்தவே இந்த நூல் வெளிவருகின்றது.

"இறைபணி துலக்கும் ஆன்மிகக் கதைகள்" என்னும் இந்த நூலில் எமது சைவத்திருநெறிக்கழகத்தின் வரலாற்றையும் அறியலாம். மேலும் 63 நாயன்மார்களில் திருமுறைகள் பாடியும், திருத்தொண்டு செய்தும், தீபமேற்றல், ஆலயத்தில் அலகிடல், மெழுக்கிடல் செய்தும் பூமாலை புனைந்தேற்றியும் மேலும் சந்தனக் காப்பிட்டும், திருக்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டியும் தமது வாழ்நாள் முழுவதும் இறைபணியாற்றிய அருளாளர்களின் பணியைக் கதைகள் வடிவில் எழுதி வெளியிடத் திருவருள் பாலித்தது.

காலங்கள் கடந்தாலும் எமது வாழ்வில் தினம் சில நிமிடமேனும் இறைபணியாற்றினால் நற்பயனடையலாம். வீண் பொழுது போக்காமல் இறைபணி செய்தால் வாழ்வில் கல்வி உயர்வு, திறமை, நற்பண்பு, வாழ்வில் முன்னேற்றம், எதிர்காலத்தில் யாவராலும் சான்றோராகப் போற்றப்படும் பெருமை யாவும் எமது குலதெய்வங்களின் கடைக்கண் வீச்சில் அமையும். இப்பணியை நூற்றாண்டு காலமாக இவ்வாலயத்தில் பல தொண்டிலும் இணைந்து அரும்பணியாற்றிய தொண்டர்களின் பரம்பரை இன்று மூன்றாம் நாலாம் சந்ததியிலும் சகல வளர்ச்சியுடன் சீரும் சிறப்பும் அடைந்ததை நாம் காண்கின்றோம்.

நூறாண்டுகளுக்கு முன் குடிசையில் வாழ்ந்து விவசாயஞ் செய்து இறைபணியாற்றியவர்கள் எம் முன்னோர்கள். அவர்கள் செய்த நற்பணிகளால் பிற்சந்ததியினர் சிறப்பான வீட்டுவசதி அரச, அரச சார்பற்ற உயர்பதவிகளுடன் மேலோங்கினர். பல்சுவைக் கலைகளிலும் சிறந்து மண்ணுக்குப் பெருமை சேர்க்கின்றனர். இவை யாவும் இறைபணி செய்தவர்களின் மாண்பாகும்.

இறை பணியாம் அறப்பணி செய்து நற்பண்பு சேர்க்கும் சிறப்புடன் வாழ இணுவில் மண்ணில் குடிகொண்டுள்ள தெய்வங்களின் ஆசியும் அனுசரணையும் என்றும் கிடைக்கப்பெறுவோமாக!

**என்றும் இறைபணியில் வாழும்**
**இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| i. | ஆசிச்செய்தி | iii |
| ii. | வாழ்த்துரை | v |
| iii. | அணிந்துரை | vi |
| iv. | நூல்முகம் | viii |
| ◆ | சைவத்திருநெறிக்கழகத்தின் வரலாற்றுப் பதிவுகள் | 1 |

**ஆலயத்தொண்டாற்றி உயர்வடைந்தவர்கள் வரிசையில்**

| | | |
|---|---|---|
| 1. | திலகவதியாரும் திருநாவுக்கரசரும் | 11 |
| 2. | கழற்றறிவார் (சேரமான் பெருமான்) நாயனார் | 23 |
| 3. | நமிநந்தியடிகள் | 29 |
| 4. | கலிய நாயனார் | 32 |
| 5. | குங்கிலியக்கலய நாயனார் | 34 |
| 6. | மூர்த்தி நாயனார் | 37 |
| 7. | நந்தனார் | 41 |
| 8. | தண்டியடிகள் | 46 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழாக் காணும் (60ஆம் ஆண்டு)
# இணுவில் சைவத்திருநெறிக்கழகம்
# (பதிவு இல. HA/4/J/196)

## சைவத்திருநெறிக்கழகத்தின் வரலாற்றுப் பதிவுகள்

இணுவில் திருவூரின் சிறப்பான ஆலங்களின் மகிமையால் பல நூற்றாண்டு காலமாக சைவமும் தமிழும் நன்கு பேணப்பட்டன. எம் முன்னோரின் சமய வாழ்வு இயல்பாகவே வளர்ந்ததால் பிற்காலச் சந்ததி யினரும் நன்கு கடைப்பிடித்தனர். குறிப்பாக எம்மக்கள் மத்தியில் சமய, கலை, கலாசாரம், ஆலய வழிபாட்டுடன் ஆலயத் தொண்டுகள் வளர்ந்து பெருந்திருவிழாக் காலத்தில் சிறியோர் முதல் முதியோர் வரை நன்கு ஈர்க்கப்பெற்றனர். விசேட நாட்களில் ஆலயங்களில் கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்து, தாம் சார்ந்த பொது மன்றங்களில் சமய, சமூக, கலை களைப் பேணி வந்தனர்.

பொது மன்றங்களில் இளையோர் மற்றும் வாலிபர்கள் கூடிச் சமய விழாக்களுடன் நாயன்மார் குருபூசைகளை நடாத்தியும் சமயச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தும் சூழலிலுள்ள ஆலயங்களில் தாமாகவே முன்வந்து தொண்டுகள் செய்தும் தம்மை அர்ப்பணித்தனர். ஆரம்ப காலத்தில் கயிலாயநாதனின் (இளந்தாரி) அரச பணிமனை இருந்த இடத்தில் எம்முன்னோர் தினமும் தீபமேற்றி வழிபட்டு வந்தனர். இக்குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளர் பரம்பரையில் அம்பல வாணர் (இராசா) என்பவர் தினமும் பூசை செய்து வழிபட்டு வந்தார்.

இவ்வழிபாட்டு நிலையம் நீட்சி பெற்றுப் புதிய மண்டபம் ஒன்று உருவாகியதும் பிற்காலத்தில் இளந்தாரி சனசமூகநிலையம் உரு வானது. இச்சனசமூக நிலையத்தில் பெரியார்களுடன் அன்றைய வாலிபர்கள் பலரும் செயற்பட்டனர். சமய விழாக்கள் குருபூசைத் தினங் கள் யாவும் சிறப்பாக நடைபெற்றன. இச்சனசமூக நிலையத்தின் உறுப்பினர் பலரின் சிந்தையில் எமது சைவத்தை மேம்படுத்தும் கழக மொன்றை நிறுவ ஏற்பாடானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத்திருநெறிக் கழகத்தின் ஆரம்பம்

ஏற்கெனவே தீர்மானித்தபடி 63 நாயன்மார் வரிசையில் தோன்றிய மூன்று பெண் அடியார்களுள் காரைக்கால் அம்மையார் முதன்மையானவர். மேலும் தமது அயராத பக்தியால் இறையருளை நேரிற் பெற்ற சிறப்பானவர். இவ்வரிய குருபூசைத் தினத்தில் எமது சைவத்திருநெறிக்கழகம் அமைந்தமை சிவகாமி அம்பாளின் திருவிளை யாடலே என உணர முடிகிறது.

1962 பங்குனி மாதம் காரைக்கால் அம்மையாரின் குருபூசைத் தினமான நல்ல சுபதினத்தில் எமது இணுவில் சைவத்திருநெறிக்கழகம் ஆரம்பமானது. சைவப்பெரியாரான அம்பலவாணர் (இராசா) அவர் களையே தலைவராகக் கொண்டு வாலிபரான பெ.கனகசபாபதி செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் கா.நடராசா, தி.சி.சண்முகலிங்கம், செ.இலகுநாதன், சி.நடராசா போன்ற துடிப்பான பலர் நிர்வாக உறுப்பினர்களாகவும் நியமனம் பெற்றனர். இதன் பயனாகச் சைவசமய விழாக்கள், குருபூசைத் தினங்கள் சமயச் சொற்பொழிவுகள் யாவும் சிறப்படைந்தன.

இக்கழகத்தைச் சேர்ந்த வாலிபர்களின் கலை ஆர்வம் மேலிட்ட தால் இவ்வூர் மாணவர்களிடையே நடனம், சங்கீதம், மிருதங்கம் போன்ற பாடங்களைப் போதிக்கும் வகுப்புகளையும் ஏற்பாடு செய்தனர். இப்பணி யாவராலும் போற்றப்பட்டது. காலங்கள் செல்லவும் அன்றைய உறுப்பினர் சிலர் வேலை வாய்ப்புப் பெற்றும், திருமணமாகியும் இச்சூழலை நாடாது விட்டனர். அதனால் கலைசார் வகுப்புகள் நலிவடைந்தன. இவ்விடத்தில் நடைபெற்ற சமயப்பணி, சமூகப்பணி யுடன் வாசிப்புப் பணியும் தொடர்ந்தன.

## ஆலயத் திருப்பணி

சிவகாமி அம்பாளின் பேரருளால் திருவாக்குச் சொல்லியும் பிடியரிசி எடுத்தும் அம்பாளின் பாரிய திருப்பணிகளைத் தானொருத்தி யாக நின்று செய்து வந்தவர் சாத்திரம்மா என்னும் தெய்வீகப் பெண்மணியாவார். 1974இல் ஒருநாள் திருவாக்குரைத்துக்கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரம்மா எம்மை அழைத்தார். அருட்சித்தி பெற்ற அவர் அம்பாளின் உள்வீதித் திருப்பணிகளை முன்னின்று செய்யுமாறு கூறினார். நீங்கள் முன்னின்றால் மேலும் பலர் கூடுவர். உங்களுக்கு வேண்டிய யாவும் அன்னை தருவாள் என்றார். சிவகாமி அம்பாளின் சித்தத்தைச் சாத்திரம்மாவின் திருவாக்கால் பணித்த திருப்பணியை ஏற்றோம். அன்றைய சைவத் திருநெறிக்கழகத்தவர்களுடன் எமது பணி தொடங்கியது.

இவ்வூர் மு.இராசையா, மூ.சிவலிங்கம், பெ.கனகசபாபதி, கா.நடராசா, க.காலிங்கராசா (சின்னமணி), நா.கணேசபிள்ளை, வை.க.வைத்திலிங்கம் ஆகிய ஏழு பேர் இப்பணியை ஆரம்பித்தோம். அக்காலத்தில் மேலும் சில குழுவினர் இச்சூழலில் செயற்பட்டதால் எம்மைப் பெருமைப்படுத்தாது சிவகாமி அம்பாளின் திருப்பணிக்குழு வென்ற பெயருடன் செயற்பட்டோம். அம்பாளின் பேரருளும் சாத்திரம்மா வின் திருவாக்கும் பலிதமானது. யாவும் சிறப்படைந்தன. பொது மக்களின் பேராதரவும் எம்மவரின் பேரூக்கமும் கைகொடுத்தது. 16 வருடங்கள் திருப்பணிகள் பல செய்து இன்புற்றோம்.

## சிவகாமி அம்பாளின் அன்னதானமும் அன்னதான மண்டபமும்

இந்துமகா சபையினரால் 1977இல் தொடங்கிய தேர்த்திருவிழா வன்று நடைபெறும் அன்னதானப் பணியை 1980 தொடக்கம் நாம் செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அக்காலத்தில் அப்பணிக்கான இட வசதியில்லாததால் எம்மால் புதிய அன்னதான மண்டபம் அமைக்கவும் அம்பாள் அருள் பாலித்தார். 1990இல் இன்றைய அன்னதான மண்டபம் உருவானது. அன்னதானம் செய்யும் காலம் தவிர்ந்த வேளையில் இம்மண்டபத்தில் சமயக்கல்வி மற்றும் சமய நிகழ்வுகளைச் செய்யுமாறு பல பெரியார்கள் தெரிவித்தனர். அக்காலத் தில் எம்பணியைத் தூண்டிய பண்டிதர் சபா.ஆனந்தர், தமிழவேள் இ.க.கந்தசுவாமி, மா.ஆனந்தர் ஆகியோரின் வேண்டுதலால் சமய பாடம் போதிக்க நேர்ந்தது. 1990இல் மா.ஆனந்தர் தாமே முன்வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு அறக்கல்வி புகட்டினார். சில வருடங்களில் யுத்தகால நிலைக்கேற்ப வகுப்புகள் நலிவடைந்தன. எமது பிரதான நோக்கில் 1980 முதல் 2016 வரை 37 வருடங்கள் அன்னதானப்பணி சிறப்படைந்தது. ஆலயப் புனரமைப்பால் அன்னதானப் பணி நிறுத்தப்பட்டது.

## சிவகாமி அறநெறிப் பாடசாலை (பதிவு இல. HA/7/56/14/62)

சைவத்திருநெறிக்கழகம் என்ற பெயரில் எமது பணி 1974 முதல் தொடங்கியதும் சிறப்பான பணி புரியும் இந்து சமய நிறுவனம் எனப் பிரகாசித்தது. அக்காலத்தில் வலி தெற்கு பிரதேச செயலர் திரு. ஆ.மகாலிங்கம் அவர்கள் எமது சூழலில் அறநெறிப்பாடசாலை யொன்றை நிறுவுமாறு அன்புக்கட்டளையிட்டார். எமது கழக உறுப் பினரின் பூரண ஒத்துழைப்புடன் இணுவில் சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை 1997 புரட்டாதி மாதம் விஜயதசமியன்று (11.10.1997) ஆரம்ப மானது. எமது உற்சாகத்தின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலைக்கு முதலீடு மற்றும் உதவிகளேதும் இல்லை. மாணவர் வரவும் குறைவானது. இதனால் வீடு வீடாகச் சென்று மாணவர்களை அழைத்து வந்தே வகுப்புகளை நடாத்தினோம். எடுத்த காரியம் நிறைவு பெற வேண்டியதால் பாடசாலையின் பொறுப்பாசிரியராகப் பொறுப் பேற்றேன். எமது வேண்டுதலின் பேரில் இவ்வூர் ஆசிரியர் த.செல்வரத்தினம் மற்றும் செல்வி. சசிசுகேதினியும் பயனேதும் கருதாத தூய சேவையாக ஏற்றுக் கற்பிக்கத் தொடங்கினர்.

அக்காலத்தில் தளபாடங்களேதுமற்ற சூழலில் மாணவர் களுடன் ஆசிரியர்களும் நிலத்தில் இருந்தே வகுப்புகள் தொடங்கின. ஆசிரியர்களின் திறமை மாணவர்களைக் கவர்ந்ததால் கூடுதலான மாணவர்கள் வரத் தொடங்கினர். அரச உதவியாக ஐந்து சோடி சிறிய வாங்குகள் கிடைத்தன. அன்பர்களின் உதவியுடன் மேலும் தளபாடங் களைச் சேர்த்தோம். சில மாதங்களின் பின் ஆசிரியர்களின் திறமையால் சமய பாடம், நீதிநெறி, பண்ணிசை ஆகிய பாடங்கள் சிறப்படைந்தன. செல்வரத்தினம் ஆசிரியரால் மாணவர்களுக்கான பரீட்சை வைத்து யாவருக்கும் பரிசில் வழங்கப்பட்டது. மேலும் நடன ஆசிரியர் மூலம் ஆரம்பகால நடனப் பயிற்சியும் காவடியாட்டமும் போதிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனம், பண்ணிசை, நாடகம், சமயப்பேச்சு ஆகிய துறைகளிலும் பயின்ற மாணவர்கள் ஆண்டு விழாக்களில் மேடையேறவும் சிறப்பான பரிசில்கள் வழங்கவும் நேரிற் கண்ட பல மாணவர் கூடுதலாக வரத் தொடங்கினர். இக்காலத்தில் 60 மாணவர் சிறப்புடன் கற்று வந்தனர்.

## ஆசிரியர்கள்

மாணவர்களின் நலன் கருதி நடனம், பண்ணிசை, ஆங்கிலம் போன்ற பாடங்களும் துறைசார்ந்த ஆசிரியர்களாற் போதிக்கப்பட்டன. முதன்முதல் கற்பிக்கத் தொடங்கிய செல்வரத்தினம் ஆசிரியர் இரு வருட காலம் கற்பித்ததுடன் வருடந்தோறும் பரீட்சை வைத்து மாணவர்களைத் தேர்வு செய்யும் பணியையுஞ் செய்தார். செல்வி சசிசுகேதினி தொடர்ந்து ஏழு வருடங்கள் கற்பித்து மாணவர்களைப் பிரகாசிக்க வைத்தார். மேலும் நடனம், பண்ணிசை மற்றும் ஆங்கில பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுமாகச் சராசரி ஐந்து ஆசிரியர்கள் கற்பித்தனர். யாவரும் நீடிய காலம் கற்பிக்க அவர்களின் இதர பணிகள் செய்ய நேர்ந்ததால் மாற்றம் பெறும்போது வேறொருவர் பணியேற்றனர். இவ்வாறு 1997 - 2016 வரை இருபத்தைந்து பேருக்கும் மேலானவர்கள் சுழற்சி முறையில் எமது பாடசாலையை வளர்த்தனர். அவர்களின் சேவை போற்றத்தக்கதாகும்.

எமது பாடசாலையிற் கற்ற மாணவர் சமுதாயம் பிற்காலத்தில் தமது உயர் கல்வியிலும் பிரகாசித்துப் பட்டம் பதவிகள் பெற்று உயர் வடைந்துள்ளனர். மாவட்டம், தேசிய ரீதியில் பரிசில் பெற்றனர். இங்கு கற்ற மாணவர்கள் யாவரும் எமது மண்ணின் வாசனை அறநெறிக் கல்வியின் ஊட்டுதலால் சைவப் பண்பாட்டுடன் சகல நற்குணங்களின் உறைவிடமாகவே பிரகாசித்தனர். இவர்களிற் பலர் இன்று யாவராலும் போற்றப்படும் சிறப்பை அடைய வைத்ததில் எமது பயன் கருதாத அற நெறிக்கல்வி உதவியதெனலாம். இதேபோல இங்கு கற்பித்த சகல ஆசிரியர்களும் தமது தூய சிந்தனையுடன் அறப்பணியாகவே செய்தனர். சிவகாமி அம்பாளின் அருட்பார்வையால் இன்று யாவரும் தமது வாழ்வில் மிகச் சிறப்படைந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் சிறப்பு

எமது பயன் கருதாத அறநெறிக்கல்வியால் எமது அறநெறி மாணவர் சமுதாயம் சமூகம் போற்றி வியப்படையும் வண்ணம் தமது சமயக்கல்வி பண்பாட்டுடன் சிவகாமி அம்பாளின் ஆலயப் பணிகளில் இணைந்து தம்மாலான சேவையைத் தொடர்ந்தனர். பண்ணிசை பாடி மகிழ்ந்தனர். வெள்ளிக்கிழமைகளில் மாலையில் ஒரு மணி நேரம் கூட்டுப் பிரார்த்தனை செய்தனர். இதன் பேறாக இம்மாணவர்கள் தமது கல்விப் பரீட்சையில் சமயம் முதலான பாடங்களில் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற பெருமையடைந்தனர்.

நடனத் துறையிற் பலர் கற்ற தொடரில் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் பட்டங்களும் பதவிகளையும் பெற்றனர். உதாரண மாக இங்கு முதன்முதல் ஒரு வருட காலம் நடனம் பயின்ற மாணவன் கணேசு பவன் என்பவர் தமது வதிவிட மாற்றத்தால் குமரவேள் நடன ஆசிரியரிடம் கற்று சகல துறையிலும் சிறந்து, யாழ் பல்கலைக்கழக நடன விரிவுரையாளராகப் பணி புரிந்தவர். மேலும் பல உயர்தரமான மாணவர்களின் நடனக்கலையை வளர்க்கிறார். எமது பல விழாக்களில் நடன நிகழ்வுகளைச் சிறப்பித்தார். அவரின் சிறப்பு சிவகாமி அம்பாளுக்கே சமர்ப்பணம்.

எமது மாணவரிற் சிலர் வில்லிசை பயின்று பல மேடைகளிற் பிரகாசித்து யாவராலும் போற்றப்பட்டனர். எமது இருபது வருட கால அறநெறிப் பாடசாலையில் அன்று பயின்ற பலரும் ஏதோ ஒரு துறையில் தம்மை வளர்த்து நாடு போற்றும் சிறப்படைந்துள்ளனர். மேற்கூறிய இருபது வருட காலமும் இவர்களைப் போதித்த ஆசிரியர்கள் யாவரும் இன்று சிறப்படையத் தமது கடைக்கண் பார்வையால் அருள் பாலித்த சிவகாமி அம்பாள் இப்பாடசாலையை வளர்த்த அன்பர்கள், சைவத்திரு நெறிக்கழகத்தினர் யாவரையும் இன்று வாழ்வில் செம்மையாக வாழ வைத்ததை யாவரும் அறிவர்.

## அரச உதவி

1997இல் ஆரம்பித்த எமது அறநெறிப் பாடசாலைக்கென முதலில் 1998இல் ஐந்து சோடி சிறிய வாங்குகள் கிடைத்தன. மேலும் மாணவர்களுக்கான சமய நூல்கள் ஒரு சோடி தாளம், ஒரு சுருதிப்பெட்டி யும் கிடைத்தன. இரு முறை மட்டும் மாணவர்களுக்கான சீருடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டன. இந்து சமய கலாசார அமைச்சினால் மின்னிணைப்பிற் காக 25000/= கிடைத்தது. தளபாடங்களுக்காக ரூபா முப்பதாயிரம் மட்டும் கிடைத்தது. மேலும் கற்பித்த ஆசிரியர்களுக்காக வருடமொரு முறை 2000/= அவர்களின் வங்கிக் கணக்கில் இடப்பட்டது.

எமது 20 வருட அறநெறிப் பாடசாலை வளர்ச்சியில் மேற்கூறிய உதவிகளுக்கு மேலாக எமது அன்பர் ஒருவரின் பேருதவியால் மேலதிகமாக ஒரு முறை சகல மாணவர்களுக்கும் சீருடை தைத்து வழங்கப்பட்டது. 10 சோடி பெரிய வாங்குகள், ஒரு மேசை, நான்கு கதிரைகள் வாங்கப்பட்டன. பிற்காலத்தில் கதிரைகள் களவாடப்பட்டன. தளபாடங்கள் யாவும் அன்னதான மண்டபத்தினுள் வைக்கப்பட்டன. இவ்விடத்தில் ஆலய வாகனங்களால் நிரப்பப்பட்டதால் ஐந்து வருடகாலம் உபயோகிக்க முடியாது முடங்கியுள்ளது.

## நூல் வெளியீடு

சைவத்திருநெறிக்கழகம் தமது வளர்ச்சியில் சிவகாமி அம்பாளின் திருப்பணி, அன்னதானப் பணியுடன் சமய பாடப் போதனை யின் மேம்பாட்டிற்காக அறநெறிப் பாடசாலை நிறுவி அதனைச் சீருடன் வளர்க்க வேண்டிய நியதி இருந்தது. ஒரு அறநெறிப் பாடசாலை நிறுவி இயங்க வைப்பது வெகுசிரமம். அன்று எமது கழகத்தினர் எவரும் வசதி படைத்தவர்கள் அல்ல. சிவகாமி அம்பாளின் பெருங்கருணையால் இப் பணியையும் ஏற்றோம். சிறப்புடன் இயங்க வைக்க வேண்டிய நிதி வசதி போதாது. பல அன்பர்கள் உதவினர். மாதாந்தம் ஏற்படுஞ் செலவினம் மற்றும் ஆண்டு விழாக்கள் சமய நிகழ்வுகளுக்கெனப் பெருநிதி தேவைப் பட்டது.

எமது அறநெறிப்பாடசாலை தொடங்கிய காலம் முதல் சகல சமய விழாக்களையும் சிறப்பித்தவர் எம்மண்ணின் மைந்தன் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள். எமது நிதிநிலையை நன்குணர்ந்தவர். ஐந்து வருடகாலத்தின் பின்னும் எமது சமயப் பணியைத் துலக்குவதன் பேரில் வருடம் ஒரு சமய நூலாக வெளி யிட்டால் மாணவர்களுக்கும் பயன் கிடைக்கும். பொது மக்களும் உதவுவர். நூல் விற்பனை மூலம் கிடைக்கும் வரவால் நிதிவளமும் பெருகுமென உற்சாகப்படுத்தினார். பெருமுயற்சியுடன் முதலாவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிக்களஞ்சியம் என்றும் நூல் வெளிவந்தது. அடுத்த வருடம் சீரிணுவைத் திருவூர் என்னும் எமது கிராம வரலாற்றை விரிவாக எழுத முடிந்தது. இந்த நூல் உலகின் பல பாகங்களுக்கும் சென்று நற் பலனையும் எமது சைவத்திருநெறிக்கழகத்திற்குப் பெருமையையுஞ் சேர்த்தது. பலரின் வேண்டுதலும், கலாநிதி ஆறு.திருமுருகன் அவர் களின் ஆசீர்வாதமான உற்சாகமும் சிவகாமி அம்பாளின் அருட்பார்வை யும் கிட்டியதால் என் நூற்பணி உயர்ந்தது. எனது பல பணிகளுடன் நூலாக்கத்திலும் உறைய வைத்தது. பலரின் வேண்டுதலும் சிவகாமி அறநெறிப் பாடசாலையின் தேவையும் சைவசமய வளர்ச்சிக்கு உதவக்கூடிய சமய நூல்கள் வருடா வருடம் வெளிவரத் தொடங்கியது.

## இறுவட்டு வெளியீடு

வீரமணி ஐயர் எமது வேண்டுதலான சிவகாமி அம்மன் மீது பாடிய கீர்த்தனை மாலையின் 51 பாடல்கள் அமைந்தன. இப்பாடல்களில் இந்தியக் கலைஞர் மூலம் பாடி இறுவட்டாக வெளியிடுமாறு எம்மிடம் பலர் கோரினர். அப்பணியை அமரர் துரையப்பா நடராசா ஏற்று பிரபல பாடகி சோபனா அவர்களின் குரலில் இறுவட்டை உருவாக்கினார். எமது தேவைக்கான இறுவட்டுக்களைக் கிடைக்கச் செய்தார். எமது சைவத் திருநெறிக்கழகம் 2004 ஆடி மாதத்தில் அதனை அறிமுகஞ் செய்து இம்மண்ணில் வெளியிட்டது. எமது பணியில் கலையார்வத்தையும் நிறைவு செய்தோம். இப்பணியும் யாவராலும் போற்றப்பட்டது. அதன் பெருமை எமது அன்னை சிவகாமிக்கும் எமது புனிதமான இணுவில் மண்ணுக்கும் சமர்ப்பணமானது.

## தொடர்ந்த நூல் வெளியீடு

சைவத்திருநெறிக்கழகத்தின் 1974 தொடக்கமான என் பணி களில் 16 வருட காலத் திருப்பணி வேலைகளிலிருந்து விலகினாலும் 1980இல் தொடங்கிய அன்னதானப்பணி 2016 வரை தொடர்ந்தது. 2016இல் இவ்வாலயம் புனர்நிர்மாணஞ் செய்ய வேண்டியதால் ஆலயப் பெருவிழாக்கள் நிறுத்தப்பட்டதால் அப்பணியும் ஓய்ந்தது. 1997இல் தொடங்கிய அறநெறிப்பாடசாலையில் ஆலயத்தின் வாகனங்கள் மற்றும் தளபாடங்களின் பாதுகாப்புக்காக அறநெறிப் பாடசாலை தடைப்பட்டது. ஒரு வருடத்தின் பின் இளந்தாரி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகாமி அறநெறிப் பாடசாலை தொடர்கிறது. தற்போது இப்பாடசாலை யின் பொறுப்பாசிரியராக இவ்வூர் ந.தவசோதிநாதன் ஆசிரியர் அரும்பணியாற்றுகிறார். பாடசாலை வளர்ச்சியில் 2020இல் நடைபெற்ற பெரிய சந்நியாசியாரின் சமாதியடைந்த 103ஆம் ஆண்டு விழாவில் நாற்பது மாணவர்களுக்கும் சிறப்பான பரிசிலைச் சைவத்திருநெறிக் கழகம் வழங்கியது.

எமது நூல் வெளியீடு 2003-01-05 அன்று ஆரம்பமானது. தொடர்ந்து 2020 வரை 30 அரிய சமய நூல்கள் வெளியிடப்பட்டன. இந்த நூற் பணியின் தொடர்பில் எம்மை அருள் நோக்கால் உயர்த்திய சிவகாமி அம்பாளின் ஆலய வரலாற்று நூல் வெளிவரவுள்ளது. இன்றைய வெளியீடான காரைக்கால் சிவாலய வரலாற்றுடன் இந்த நூலும் வெளியாகிறது. எனது இதர பணிகள் ஓய்ந்தாலும் நூல் வெளியீட்டுப் பணி தொடர்கிறது. எனது 88ஆம் வயதில் உடல் தளர்வுற்றாலும் அம்பாளின் பேரருளால் தடுமாறாத உள்ளத்துடிப்பும் சிந்தனையின் எழு கோலமும் இன்றைய நிகழ்வை உறுதிப்படுத்துகிறது. இணுவில் சைவத் திருநெறிக்கழகம் தமது அறுபதாம் ஆண்டில் கால்பதித்த வேளை இந்த நூலையும் எழுதி சமய அறிவு பெறவிருக்கும் எதிர்காலச் சந்ததிக்கு அர்ப்பணிப்பது சிவகாமி அம்பாளின் பேரருளே யாகும். சைவத்திருநெறிக் கழகத்தின் அரிய பணிகள் புதிய பணிகளுடன் தொடர்கிறது. உறுப்பினர் யாவரும் உற்சாகத்துடன் பணியாற்றுவது இம்மண்ணின் பெருமையாகும்.

## சைவத்திருநெறிக்கழகத்தின் இதர பணிகள்

இணுவில் திருவூரின் பெருமை கருதி எமது கழகம் சமய சமூகப் பணிகளைச் செய்யும் நியதியையும் பெற்றது. முன்னர் சிவகாமி அம்பாளின் திருப்பணிக் காலத்தில் மஞ்சத்தடி முருகன் ஆலயம் மற்றும் காரைக்கால் மயானத்திலும் பல சிரமதானப் பணியை ஏற்றது. உலகப் பெருமஞ்சம் அமைத்த சித்தர் பெரியசந்நியாசியார் சமாதியடைந்த நூறாவதாண்டு நிறைவு விழா முதல் வருடாவருடம் (2017, 2018, 2019, 2020) நூல்கள் வெளியிட்டுச் சிறப்பான நினைவு விழாக்களையும் நடாத்தினோம். இவ்வருட (104ஆம் ஆண்டு) 2021 விழாவில் காரைக்கால் சிவாலய வரலாற்று நூலையும் வெளியிட இறையருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலித்தது. இவ்வூரில் வாழும் மாணவர்களின் திறமை அடிப்படையில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்றோர், சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கு வருடந் தோறும் சிறந்த நூற் பரிசில் வழங்கப்பட்டது. மேலும் பெரிய சந்நியாசியாரின் நினைவு விழாக்களில் எமதூர் பாரம்பரிய கலைகள் மற்றும் சைவம் சார்ந்த பணியாளர்களான முதியோர் பெருமைப்படுத்தப் பட்டனர். இவை யாவும் உட்பட நூறு பேர் வரையில் விருதுகள் வழங்கிப் பெருமைப்படுத்திய பேறும் பெற்றோம்.

எமது சைவத்திருநெறிக்கழகத்தின் 60ஆம் ஆண்டு விழாவை ஆக்கபூர்வமான பயனுள்ள விழாவாக அமைய வேண்டுமென்ற பல சமயப் பெரியார்களின் அன்புக்கட்டளையும் சிவகாமி அம்பாளின் அருட் பார்வையும் எம்மண்ணின் பெருமையை உயர்த்தும் விழாவாக அமைகின்றது. 108 மாணவர்களுக்கான சிறந்த நூற்பரிசில்களும் ஆரம்ப காலம் போதித்து எம்மை என்றும் உற்சாகமூட்டிய ஆசிரியர் இருவர்களுக்கான நன்றியறிதலும் இடம்பெறுவது சைவத்திருநெறிக் கழகத்தின் கடமையாகும். இம்மண்ணில் நீடிய கால சேவையாற்றிய சைவ நிறுவனம் என்னும் பெருமை எம்மை வளர்த்த எமது தாய்த் தெய்வமான சிவகாமி அம்பாளுக்கே சமர்ப்பணமாகும்.

இந்த நூலுக்கு ஆசியுரை எழுதிய புரவலர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய எமது நீடிய காலத்தலைவர் திரு.கெ.தவராசா அவர்களுக்கும் சான்றுரை வழங்கிய ஆரம்பகாலச் செயலாளரும் பிற்காலத்து (இன்றுவரை) காப்பாளருமான திரு.பெ.கனகசபாபதி (ச.நீ) அவர்களுக்கும் இம் மலரைக் குறுகிய காலத்தில் ஆக்கித்தந்த இணுவில் கிழக்கைச் சேர்ந்த சுடர்நிலவு கிறபிக்ஸ் உரிமையாளர் பாலசுப்பிரமணியம் ராஜேஷ்கண்ணா அவர்களுக்கும் நன்றிகள். மேலும் இச்சீரிய பணியில் ஒருமையுடன் உதவிய அனைவரையும் அன்னை கருணையுடன் அருள் பாலிக்க வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**நூலாசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆலயத் தொண்டாற்றி உயர்வடைந்தவர்களின் வரிசையில்

# திலகவதியாரும் திருநாவுக்கரசரும்

சைவமும் தமிழும் சகல சீர்வளங்களும் மேலோங்கிய திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூரில் வாழ்ந்த புகழனார் மாதினியார் தம்பதிகள் தவப்பேறு பெற்றவர்கள். இவர்களின் இனிய இல்லற வாழ்வின் தவப்பயனாக அவதரித்தவர்கள் திலகவதியார் மருணீக்கியார் என்னும் இறையருட்செல்வர்கள்.

பெற்றோர் இருவரும் தம் பிள்ளைகளைச் சிறுவயதி லிருந்தே அரவணைத்து ஊட்டி வளர்த்ததுடன் சைவநெறி மூலம் சமயபக்தி, ஆலயதரிசனம், ஆலயத்தொண்டு, சைவப் பண்பாடு மற்றும் சமூகப் பற்றையும் நன்கு புகட்டினர். இவர்கள் தமிழ்க்கல்வி கற்று அறச்சிந்தனைகளையும் நன்குணர்ந்தனர்.

திலகவதியார் 12 வயதானதும் பெற்றோர் தமது வேளாண் குலத்துதித்த போர் வீரருக்கு திருமண நிச்சயதார்த்தம் செய்தனர். பெற்றோர் இருவரும் குறுகிய காலத்தில் இறைபதமடைந்தனர். பிள்ளைகள் இருவரும் உறவினரின் அரவணைப்பில் வாழ்ந்தனர். சில மாதங்களில் திருமணமாகாத போதும் நிச்சயதார்த்தம் செய்திருந்த கலிப்பகையார் போர்முனையில் மாண்டார். கலிப் பகையார் இறந்ததையறிந்த திலகவதியார் தாமும் உயிர் விட முன்வந்தார். தம்பியின் வேண்டுதலும் எதிர்கால இறைபணியும் உந்தியதால் திலகவதியார் விதவைக் கோலத்துடன் சிவநெறி போற்றும் தவநிலையில் இருந்தார்.

கல்வியுடன் எதிர்காலம் பற்றியும் மனித வாழ்வின் நிலையா மையையும் நோக்கிய மருணீக்கியார் சமய சமூக நோக்கில் தண்ணீர்ப் பந்தல் அமைத்தார். வெயில் கால நிழலுக்காக தெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோரம் நிழல் மரங்களை நாட்டிச் சோலையாக்கினார். நீர் நிலைகளைத் தோண்டினார். நலிவுற்றவர்களின் தேவைகளை வழங்கினார்.

## சமய மாற்றம்

அக்காலத்தில் மெய்ச் சமயம் எது என அறிய முடியாத நிலையில் மருணீக்கியார் கொல்லாமை என்னும் தத்துவத்தைப் பேணும் சமண சமயத்தைத் தழுவினார். இவரின் கல்வி அறிவும் விவேகமும் மிகுந்ததால் சமண சமயத்தின் குருமுதல்வராக "தருமசேனர்" என்னும் பெயருடன் விளங்கினார். தருமசேனர் 40 வருடங்களுக்கு மேல் தமது சிறப்பினால் சமண சமயத்தை உயர்வடையச் செய்தார்.

## திலகவதியாரின் ஆலயப்பணி

சைவநெறியில் வாழ்ந்த திலகவதியார் பெற்றோர் கணவன் மூவரும் உயிர்நீத்தபின் தானும் உயிர்விட எண்ணினார். தம்பி மருணீக்கியாரின் வேண்டுதலால் அவரின் நன்மை கருதி இளம் விதவைத் துறவியாக வீட்டில் வாழ்ந்தவர். தமக்குதவியாக இருந்த மருணீக்கியார் சமணசமயத்தைத் தழுவிச் சென்றதால் இளம் விதவைத் துறவியாகத் தமது வீடு மற்றும் சகல சொத்துக்களையும் உறவினரையும் துறந்தார். தாம் வழிபடும் திருவீரட்டானேசுரர் ஆலயத்தை நாடினார். இச்சிவாலயத் திருமடத்தை வதிவிடமாக்கித் தவக்கோலம் பூண்டார். இதன் பேறாக இச்சிவாலயம் பிரகாசிக்க ஏதுவானது.

திலகவதியார் தமது நாளாந்தப் பணியாக அதிகாலையில் சிவசிந்தனையுடன் துயிலெழுந்து காலைக்கடன்களை நிறைவு செய்வார். ஆலயஞ்சென்று திருவிளக்கேற்றி வழிபடுவார். இறை புகழ் பாடிய வண்ணம் ஆலயத்தை நன்கு கூட்டிச் சுத்தஞ் செய்வார். பசுஞ்சாணி கொண்டு ஆலயத்தை மெழுகியதும் புனித நீராடி ஆசார சீலமாக ஆலய நந்தவனஞ் செல்வார். பல்லினப் பூக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கொய்து மாலைகளாக்கி இறைவனுக்குச் சூடுவதற்காக வழங்குவார். பின்னர் தூயசிந்தனையுடன் இறைவனைப் புகழ்ந்து பாடி நன்கு வழிபடுவார்.

திலகவதியாரின் புனிதத் தொண்டினால் வீரட்டானத்துறை ஈசனின் ஆலயம் புனிதமாகத் துலங்கியது. அவரின் தொண்டினைப் பாராட்டிய ஆலய பரிபாலகர், பூசகர் ஆகியோர் பூசையின் போது நிவேதனஞ் செய்யும் திருவமுதைத் திலகவதியாருக்கு மூன்று வேளையும் வழங்கினர். இவ்வாறு திலகவதியார் நித்திய பணியாக நாற்பது வருடங்களுக்கு மேல் சிறப்பாகத் தொண்டாற்றி முதுமை யடைந்தார். இவர் தமது பணியால் ஆலயம் சிறப்படைவது போல மருணீக்கியாரும் உடனிருந்தால் ஆலயம் மேலும் சிறப்படையும் என எண்ணினார்.

இறையருளின் உந்துதலால் ஒரு நாள் மாலை திலகவதியார் மனமுருக வீரட்டானேசுரரை வணங்கும் போது தமது தம்பியும் சைவ சமயத்திலிருந்தால் சைவம் வளருமே என வேண்டினார். அன்றிரவு “உன் தம்பி முற்பிறவியில் முனிவராக இருந்த போது செய்த தவறுதலுக்காக இப்பிறவியில் சமண சமயத்தில் ஆழ்ந்தான். அவனுக்குச் சூலைநோய் கொடுத்து ஆட்கொள்வோம்” என இறைவன் திலகவதியாரின் கனவிற் தெரிவித்தார். இறைவன் கனவில் தெரிவித்த பேரருளை வியந்த திலவதியார் தமது வேண்டுதலுக்கு இரங்கியதையிட்டு அகமகிழ்ந்தார்.

அதே சமயம் சமணரான தருமசேனரைக் கொடிய சூலை நோய் தாக்கியது. இதனால் அவர் மிகவும் வருந்தினார். அச்சமயம் சமண மதக்குருமார் தமது திறமைக்கேற்பப் பல சிகிச்சைகளையும் கையாண்டனர். பயனேதுமின்றிச் சூலை நோய் மேலும் கூடியது. சமணர்கள் தம்மாலாகாதெனக் கூறி அவ்விடம் விட்டகன்றனர். செய்வதறியாது வருந்தியவர் தமது சகோதரியை நாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலகவதியாரின் அணுகுமுறை

ஏற்கெனவே தமது வேண்டுதலுக்காகத் தம்பிக்குச் சூலை நோயை ஏற்படுத்திய வீரட்டானேசுரரை எண்ணித் திருவைந் தெழுத்தை ஓதியபடி திருநீற்றினால் நோய் கண்ட இடங்களில் பூசினார். இதனால் அவரின் நோயின் வெம்மை சற்றுக் குறைந்தது. தம்பியை வீரட்டானேசுரர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று இறைவனை வணங்கச் செய்தார். தமது சகோதரியின் தூண்டு தலால் தனது நோயைக் குணமாக்குமாறு வீரட்டானேசுரரிடம் வீழ்ந்து வணங்கியவர்

"கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே"

என்று பாடினார். இவர் பாடியதும் இவரை வருத்திய சூலை நோய் அகன்றது. மேலும் இறைவனை வேண்டிப் பல முறை வணங்கினார். அச்சமயம் "நீ மொழிக்கு மொழி தித்திக்கும் தீந்தமிழில் பதிகம் பாடினாய் அதனால் 'நாவுக்கரசு' என்ற பெயர் உலகெங்கும் நயப்புற வழங்குவதாக" என்று அசரீரி வாக் குரைத்தது. அன்று முதல் இவர் திருநாவுக்கரசர் என்னும் திருநாமத்துடன் சைவாலயங்கள் தோறும் இறைவனை வணங்கிப் பாடியும் ஆலய வளாகங்களில் புல் பூண்டுகளை அகற்ற உளவாரத் தொண்டு செய்தும் இன்புற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசரின் பாடற் சிறப்பு

இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்ட திருநாவுக்கரசர் இறைவனின் உணர்வினால் சைவ உலகின் வழிபாட்டிற்காக முதன் முதல் பாடிய பதிகங்கள் உட்படப் பல்லாயிரம் பாடல்களைப் பாடினார். அவற்றுட் பல பாடல்கள் சிதைவடைந்த போதும் தற்போது படிக்கக்கூடிய 3045 பாடல்களை நம்பியாண்டார் நம்பி திருமுறைகளாக வகுக்கும்போது இவரின் பாடல்களை நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வகுத்துள்ளார். பன்னிரு திருமுறைகளில் 1, 2, 3 திருமுறைகள் திருஞானசம்பந்தரினால் பாடப் பெற்று திருக்கடைக்காப்பு என அழைக்கப்படுகிறது. சுந்தரர் பாடிய 7ஆம் திருமுறைப் பாடல்கள் திருப்பாட்டு என அழைக்கப் படுகின்றது. மேற்கூறிய ஏழு திருமுறைகளும் தேவாரம் எனவும், பாடியவர்கள் தேவார முதலிகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவற்றுள் திருநாவுக்கரசர் பாடிய 4, 5, 6ஆம் திருமுறைப் பாடல்களே "தேவாரம்" என்னும் சிறப்புடன் அமைந்துள்ளன.

திருநாவுக்கரசு சுவாமிகள் தமது 81 வயது மட்டும் பல்லாயிரம் பாடல்கள் பாடி இறைவனை மகிழ்வித்தார். இவர் பாடிய பாடல்களில் இவரின் சிறப்பான தொண்டின் சில பாடல்களின் மகிமையையும் தொடர்பையும் அறிவோம்.

திருநாவுக்கரசர் சைவசமயத்தைத் தழுவியதால் தமது சமணம் அழிந்துவிடுமென எண்ணிய சமணத் துறவிகள் தமது பல்லவ மன்னனிடம் முறையிட்டனர். தருமசேனர் தமது தலைவராக இருந்து கற்ற மந்திரதந்திரங்களினால் சமண மதத்தை விட்டுச் சென்று சைவசமயத்தை வளர்க்கிறார். அதனால் அவரை அழைத்துத் தண்டிக்குமாறு தெரிவித்தனர். பல்லவ மன்னன் தமது மந்திரிமாரை அனுப்பித் திருநாவுக்கரசரை அழைத்து வரப் பணித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரிமார் திருநாவுக்கரசரிடம் சென்று அரசனின் கட்டளைப்படி வருமாறு அழைத்தனர். அவர் "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்..." என்னும் தொடரில் பாடி அரசனிடஞ் செல்ல மறுத்தார். மந்திரிமார் அவரைப் பணிந்து கேட்டதால் இனிவரும் வினைகளுக்கெல்லாம் இறைவன் இருக்கிறான் எனக் கூறிச் சென்றார்.

## திருநாவுக்கரசரின் நீற்றறைத் தண்டனை

திருநாவுக்கரசர் பல்லவ மன்னனின் சபையை அடைந்தார். அச்சமயம் பல்லவ மன்னன் சமணத்துறவிகளை நோக்கி இவனுக்கு என்ன தண்டனை செய்யலாமெனக் கேட்டான். துறவிகள் இவனை நீற்றறையில் (சுண்ணாம்புக்காளவாய்) போடும் என்றனர். உடனே சினங்கொண்ட கொடுங்கோலன் விசாரணை ஏதுமின்றித் துறவி களின் சொற்படியே தமது காவலாளிகள் மூலம் நீற்றறையில் திருநாவுக்கரசரை அடைத்துத் தகுந்த பாதுகாப்புகள் பலவும் செய்தான்.

நீற்றறையில் அடைக்கப்பட்ட நாவுக்கரசர் தில்லையம் பலத்தில் திருநடனம் புரியும் பெருமானின் திருவடி நிழலைத் தம் தலைமேல் வைத்து ஈசனடியார்க்கு ஈண்டு வரும் துயருண்டோ? என்று சிந்தித்தவாறு அவ்விடத்தில் தொழுத வண்ணம் வீற்றிருந் தார். இறையருளின் பேறாக வெம்மை மிக்க நீற்றறை இளவேனிற் காலத் தென்றலாக வீசியது. இதன் குளிர்ச்சி கழுநீர் மலர்ப் பொய்கையாகவும் மொய்க்கும் வண்டின் யாழ் மீட்கும் இனிய ஒலியாகவும் தோன்றி இறைவனின் திருவடி நிழலாகக் குளிர்ந்தது. இதனையே சிந்தித்த திருநாவுக்கரசர் இறைவனை மனமுருக வேண்டிப் பாடிய பாடல் இதுவாகும்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேணிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் முதல் பாடலாகக் கொண்ட பதிகத்தை பாடினார். இறைவனின் திருவடிநிழலையே தலைமேற்கொண்டு மெய்யுருகப் பாடிய வேளை இறைவன் அருள் பொங்க நீற்றறை தன் செயலிழந்து பொய்கையாகக் காட்சி தந்தது. குறிப்பிட்ட காலம் திருநாவுக்கரசர் சிவ சிந்தனையிலிருந்ததால் எழுகோலம் பூண்ட சைவசமயத்தின் மகத் துவத்தை இறைவன் பாரெல்லாம் வைத்த திருவிளையாடலேயாகும்.

ஏழு நாட்களின் பின் மன்னன் சமணர்களை அழைத்து நீற்றறையைத் திறக்கச் செய்தான். அச்சமயம் சிவானந்தப் பொலிவுடன் நாவுக்கரசர் எவ்வித உடல்மாறுபாடுமின்றி உவகையுடன் காணப்பட்டார். அவரின் நிலையைக் கண்டு வியந்தனர். அச்சமயம் கொடிய சமணர்கள் மன்னனை நோக்கி இவன் முன்னர் எங்களின் சமய மந்திரங்களைக் கற்றவன். அந்த மந்திர சக்தியால் இதனைச் சாதித்தான். இவனை உயிருடன் விடக்கூடாது என்று கூறி இவனுக்கு நஞ்சூட்டிக் கொல்ல வேண்டுமென்றனர்.

**நஞ்சு கலந்த பாற்சோறு**

பகுத்தறிவற்ற கொடுங்கோலன் இவனுக்கு நஞ்சு கலந்த பாற்சோற்றை ஊட்டுமாறு கூறினான். எப்பழிக்கும் அஞ்சாத சமணர் அரச கட்டளைப்படி நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்ண வைத்தனர். "நஞ்சும் அமுதாகும் எங்கள் நாதன் அடியார்க்கே என்று கூறியதும் நஞ்சுணவை உண்டார்." பாற்கடலில் ஆலகால விஷத்தையுண்ட சிவபெருமானுக்கு அமுதமானது போல நாவுக்கரசருக்கும் நஞ்சுணவு இறைவனருளால் தீங்கெதனையும் விளைவிக்கவில்லை. இதனால் இறையுணர்வு மேலோங்கிய திருநாவுக்கரசர்

"துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்து இராதே
அஞ்செழுத்தோதி நாளும் அரனடிக்கு அன்பு அதாகும்
வஞ்சனைப் பாற்சோறு ஆக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமுதாக்கு வித்தார் நனிபள்ளி அடிகளாரே"

என்ற முதற் பாடலுடன் பதிகத்தையும் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதயானையால் இடறச்செய்தது**

நாவுக்கரசர் நஞ்சுணவை உண்டு எமது மந்திர சக்திக்கு வலுச்சேர்த்தான். இவனை உயிர் தப்ப விடக்கூடாதென மன்னனிடம் கூறிய சமணர் கூட்டம் இவனை எமது மதயானையால் இடறச் செய்து கொல்ல வேண்டுமென்றனர். தீயோர் கூட்டத்து அரசனான மாபெரும் தீயோன் தமது பட்டத்து யானையால் இடறச் செய்யுமாறு கட்டளையிட்டான். ஏவலாளர் மதங்கொண்ட பட்டத்து யானையைக் கட்டவிழ்த்து விட்டனர். யானையும் மூர்க்கமாக வரவும் பாகன் திருநாவுக்கரசரை இடறுமாறு யானையைத் திருப்பினான்.

அச்சமயம் நாவுக்கரசர் ஏதும் அச்சமற்றவராய் விடையேறும் பெருமானைத் துதித்த வண்ணம் ஒரு பதிகத்தைப் பாடினார். முதற் பாடல் இதுவாகும்.

"சுண்ண வெண் சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறும் அகவம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப்புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதும் இல்லை"

நாவுக்கரசர் உலகத்தோர் உய்யும் வண்ணம் இப்பதிகத்தை மகிழ்வுடன் பாடினார். மதங்கொண்டு வந்த யானையை ஏற்றிப் பார்த்து வெஞ்சுடர் மூவிலைச்சூல விரட்டர் தம் அடியேம் நாம் அஞ்சுவதில்லை என அழுத்திக் கூறினார். நாவுக்கரசரின் பக்தி நெறியை கண்டதும் மதயானை அவரை வலம் வந்து யாவரும் வியக்கும் வண்ணம் தாழ்ந்து தரையிற் பணிந்து வணங்கி எழுந்து விலகியது. அச்சமயம் அதன் மீதிருந்த பாகன் யானையைத் திருப்பி நாவுக்கரசரைக் கொல்லுமாறு ஏவினான். யானை பாகர்கள் யாவரையும் கீழே தள்ளிக் கொன்றது. அங்கு நின்ற சமணர்களைத் துரத்தியும் பெரிய அட்டகாசம் புரிந்தது. அதனைக் கண்ட அரசன் பெருந்துயரடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பியோடிய சமணர்கள் ஒன்றுகூடித் தமது இயலாமையை போக்குவதன் பேரில் மன்னனிடம் வீழ்ந்து வணங்கி நின்றனர். இதனால் வெகுண்ட மன்னன் இனிச் செய்வது யாது? எனச் சீறினான். இவன் நீடிய காலம் எமது சமய உண்மைகளைக் கற்றறிந்ததால் யாவற்றையும் எதிர்கொண்டு சித்தி பெற்றான். இவனை உயிருடன் விட்டால் யாவருக்கும் தீங்கு விளைவிப்பான். மேலும் உமது ஆட்சியையும் சிதைத்துவிடுவான் என்றனர். அரசன் மதிகெட்டவனாய் இனி என்ன செய்வதென்றான்.

## கற்றுணை பூட்டிக் கடலில் பாய்ச்சுதல்

கடும் பாவத்திற்கும் அஞ்சாத சமணர்கள் அவனைக் கற்பாறையில் இருத்திக் கயிற்றினாற் கட்டிக் கடலில் தள்ளிவிட்டு இறக்கச் செய்ய வேண்டுமென்றனர். அது கேட்ட பல்லவன் தமது கொலையாளிகளை அழைத்து அவனைக் கல்லுடன் கட்டிக் கடலில் தள்ளிவிடுங்கள் எனப் பணித்தான். அவர்கள் பெரிய கற்பாறை ஒன்றுடன் அவரைக் கட்டிப் படகிலேற்றித் தூரக் கடலில் தள்ளி விட்டுக் கரை சேர்ந்தனர்.

ஆழ்கடலில் வீசப்பட்ட நாவுக்கரசர் எப்பரிசாயினும் ஆகட்டும் எந்தையை ஏற்றிப் புகழ்வேன் எனக் கூறி நமச்சிவாயப் பதிகம் பாடி இறைவனைப் போற்றினார். முதற் பாடல் இதுவாகும்.

“சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே”

திருநாவுக்கரசர் நமச்சிவாயப் பதிகத்தைப் பக்தியுடன் பாடியதும் அவரைக் கட்டியிருந்த கயிறுகள் தானாகவே அவிழ்ந்தன. பாறைக்கல் தோணியாக மிதந்தது. நாவுக்கரசர் சிவப்பொலிவுடன் திகழ கல்லான ஓடம் கரையொதுங்கித் திருப்பாதிரிப்புலியூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயத்தினண்மையில் தங்கியது. சைவசமயத்தின் பெருமை நிலைநாட்டப்பட்டது. நாவுக்கரசர் தம்மை அன்புடன் போற்றிப் பாடிய பேறாக இறைவனருளாளல் சமணர்களின் நான்கு கொடிய தண்டனைகளையும் செயற்படாதவாறு செய்வித்தார்.

## பல்லவ மன்னன் சிவபக்தனானான்

சமணர்களின் தூண்டுதலாலும் மன்னன் தனது முன் வினைப் பயனாலும் நீதிநெறி தவறித் திருநாவுக்கரசருக்குப் பல தீமைகளைச் செய்தான். சமணர்களின் போலியான நெறி சார்ந்து பாடலிபுரத்தில் அரசாண்டான். திருநாவுக்கரசர் சிவநெறி பூண்டு உண்மையான சிவநெறி தழுவியதால் சிவபெருமானின் தெய்வ நீதியைப் பெற்றார். சமணர்கள் தமது சமய நெறியை மேன்மைப் படுத்தாததால் பல அழிவுகளையுஞ் செய்து சைவ சமய பக்தனுக் குத் தீங்கிழைக்கத் தூண்டினர். திருநாவுக்கரசர் தமது இறை பக்தியால் சைவ சமயத்தை மேன்மைப்படுத்தினார்.

பல்லவ மன்னன் தமது பாவநெறி நீங்கவும் திருநாவுக்கரசர் செய்த அற்புதத்தால் சைவசமயமே மெய்ச்சமயமென உறுதிப் படுத்தினார். இதை உணர்ந்த பல்லவ மன்னன் சமணர்களின் பள்ளிகளை இடித்துத் தள்ளினான். தான் சைவ சமயத்தைத் தழுவும் சிந்தனையால் சமணர்களை விரட்டியடித்தான். அவர்களின் பள்ளிகளை இடித்த கல்லினால் திருவதிகையில் குணபரவீச்சுரம் என்னும் சிவாலயத்தைக் கட்டுவித்துச் சைவசமய நெறியில் வாழ்ந்தான். இவன் பாடலிபுரத்திலுள்ள பள்ளிகளை இடித்த கற்களைத் திருவதிகைக்குக் கொண்டு வரமுன் திருநாவுக்கரசரைக் கண்டு பணிந்தான். தான் செய்த பழிக்காகவே குணபரவீச்சரம் என்னும் சிவாலயத்தைக் கட்டியதுடன் சைவநெறியில் வாழ்வதற் கான ஆசீர்வாதத்தையும் பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசர் பின்னர் தில்லைச்சிதம்பரம் முதலான பல சிவாலயங்களுக்குச் சென்று வழிபட்டதுடன் உளவாரப் பணியையும் செய்தார். சீர்காழியில் திருஞானசம்பந்தர் அவதரித்து அற்புதங்களைச் செய்ததை அறிந்து சீர்காழிக்கு நேரிற் சென்றார். திருஞானசம்பந்தர் தமது திருக்கூட்டத்துடன் நாவுக்கரசர் தம்மை நேரிற்காண வருவதை அறிந்தார். அவரை எதிர்கொண்டு வரவேற்க வந்தபோது நாவுக்கரசர் சம்பந்தரின் பொற்பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். சம்பந்தரும் அவரை வணங்கி இறுகத் தழுவினார். அச்சமயம் நாவுக்கரசரின் முதுமையை நோக்கி "அப்பரே" என்றார். நாவுக்கரசர் அடியேன் என்று அன்பு மேலிட உரையாடினர். இருவரும் பல சிவாலயங்களுக்குச் சென்று வணங்கிப் பதிகங்கள் பாடினர். இதனால் இருவரும் பல அற்புதங்களையுஞ் செய்தனர்.

திருஞானசம்பந்தர் பாலகனாக இருந்தாலும் அம்மை அப்பனால் தடுக்கப்பட்டவர். 16 வயது வரை பதினாறாயிரம் பாடல்கள் பாடினார். இவர் பாடிய பாடல்களில் சிதைவுற்றது நீங்கலாக எஞ்சிய 4159 பாடல்கள் பன்னிரு திருமுறையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளை அலங்கரிக் கின்றன. இதேபோல அப்பர் பாடிய 3045 பாடல்களும் சிறப் பானவை. சைவசமயம் இன்று பிரகாசிக்க உயிர் கொடுத்தது போல் பன்னிரு திருமுறைகள் பாடிய அருளாளர்கள் சைவம் போற்றும் உத்தமர்களாகவே போற்றப்படுகின்றனர்.

## அப்பரின் தொண்டுகளின் சிறப்பு

அப்பர் பெருமான் தமது வாலிபப் பருவத்தில் ஏதுமறியாது சமய சமூகப் பணியாகப் பல அறப்பணிகளை நிலைநாட்டினர். கொல்லாமை என்னும் சிறப்பால் சமணத்தில் நாற்பதாண்டுகளுக்கு மேல் ஆழ்ந்தவர். சகோதரியின் வேண்டுதலால் இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்டார். இதன் பேறாகத் தேவாரப் பதிகங்கள் பாடிப் பல அற்புதங்கள் செய்தார். ஆலய வீதிகளில் உளவாரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு செய்தார். சமணர்களின் கொடுமையை அகற்றிச் சைவத்தை நிலைநாட்டினார். சமணர்களால் வழிநடாத்தப்பட்ட பல்லவ மன்னன் சைவசமயம் தழுவவும் சமணத்தை விரட்டவும் சிவநெறியை மேம்படுத்தினார். இவர் சைவப்பண்பாட்டுடன் ஆலயப்பணி செய்யும் பெருமையையும் நிரலிட்டுப் பாடியுள்ளார். நிலைபெறுமாறெண்ணுதியேல் என்ற தொடரில்...

"நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டு....."

என்று தொடர்ந்து இறைபணியின் சிறப்பை நிலைநாட்டு மாறு பாடினார். சமய குரவர் வரிசையில் ஏனைய மூவரும் அந்தணர்கள். இவர் மட்டும் வேளாண் குலத்தவரும் முதியவரு மாவார். இறைபணியைத் தமது தொண்டாக ஏற்று வாழ்ந்து காட்டியவர். தமது பக்தியால் இறைவனின் பேரருளுடன் பல சித்திகளையும் பெற்றவர். மண், பெண், பொன் ஆகிய மூன்றையும் முற்றாகத் துறந்து சைவ சமயமே மெய்ச்சமயமென உறுதிப் படுத்தியவர். அப்பர் பெருமானின் சமயப்பணி சார்பில் தேவார முதலிகளில் ஒருவராகவும் 63 நாயன்மார்களில் ஒருவராகவும் தம்மை உலகறியச் செய்தார்.

**திலகவதியார்**

தமது பெற்றோர் கணவன் மூவரும் இறந்தபோதும் தம்பிக்காக வாழ்ந்தார். தம்பி சமண சமயத்தைத் தழுவியதால் யாவற்றையும் துறந்து இளம் விதவைக் கோலத்தில் இறை பணியாற்றியவர். தமது முதுமையில் திருவதிகை வீரட்டானேசுரரின் பேரருளால் தம்பி தடுத்தாட்கொள்ளப்பட உதவினார். மாதர்குல மாணிக்கமாக சிவனடியையே சிந்தித்து தமது வாழ்நாள் முழுவதும் இறைபணியாற்றிய பெருமைக்குரியவர். இவரின் வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியின் அம்சமாக இன்றுவரை நாள் நேரம் தவறாது ஆலய தரிசனம், ஆலயப் புனிதம் நோக்கி அலகிடல், மெழுக்கிடுதல், ஆசார சீலராக நந்தவனத்தில் நறுமலர் கொய்து மாலையாக்கி இறைவருக்கு அலங்காரஞ் செய்தல், திருவிளக்கேற்றல், இறைபுகழ் பாடுதல் போன்ற அத்தனையும் சைவப்பண்பாட்டின் அங்கமாகும்.

திலகவதியார் நாற்பது வருடங்களாகச் செய்த பணிகளை நாற்பது வருடங்களின் பின் சைவத்தைத் தழுவிய திருநாவுக்கரசர் தமது பாடலாகப் பாடியதில் ஒருமையைக் காண முடிகிறது. திலகவதியார், திருநாவுக்கரசர் ஆகிய இருவரும் முற்றவப் பயனாக அவதரித்து இப்பிறவியில் சைவம் உய்யும் வண்ணம் தமது உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்தமை இறைவனின் திருவிளை யாடலேயாகும்.

## 2. கழற்றறிவார் (சேரமான் பெருமான்) நாயனார்

சேர நாட்டில் கொடுங்கோளூர் என்னும் புண்ணிய பூமி பல வளங்களையும் கொண்ட சிறப்புடையது. இத்திருவூரில் அமைந்த திருவாஞ்சிக்களம் என்னும் சிவாலயம் பிரசித்தமானது. இத் திருவூரில் அரசாண்ட செங்கோற்பயன் என்ற சேரமன்னன் இவ் வுலக வாழ்வின் நிலையாமையையெண்ணி தானாகவே அரசைத் துறந்து கானகமேகினான்.

இச்சமகாலத்தில் கொடுங்கோளூரின் பெருமாக்கோதையர் என்னும் சேரமானார் அவதரித்தார். இவர் அரச பரம்பரையின் இளவரசனானார். தமது சைவநெறிப் பற்றும் முற்பிறவியின் ஆன்மிகத் தொடரும் வழிகாட்ட திருவாஞ்சிக்களம் ஆலயத் தினருகே ஒரு மாளிகையமைத்து வாழ்ந்தார். இவர் இளவரசருக் கான அரசாட்சிக்குரிய பணிகளை நாடாது ஆலயத்திருத் தொண் டினை நாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் அதிகாலை துயிலெழுந்து நீராடிச் சிவசின்னமாம் திருநீறு துலங்க ஆலய நந்தவனத்தில் நறுமலர்களையும் அரும்புகளையும் கொய்து அதனை மாலைகளாக்கி இறைவனுக்குச் சாத்துவார். ஆலயத்தைக் கூட்டிப் பெருக்கியதும் பசுஞ்சாணியால் தரையை மெழுகுவார். ஆலயத்தில் தீபங்களை ஏற்றியும் மேலும் பல இறைபணிகளையுஞ் செய்து இன்புற்று இறைவனைப் போற்றிப் பாடுவார்.

கொடுங்கோளூர் மன்னன் அரசைத் துறந்து சென்றதும் மந்திரிமார் அரசின் பரிபாலனத்தை ஏற்குமாறு பெருமாக்கோதையரிடஞ் சென்று வேண்டினர். பெருமாக்கோதையர் தமது இறைபணி அறப்பணிக்கு மேலாக அரச பணி ஏற்பதையிட்டு இறைவனின் திருநோக்கை வேண்டினார். இறைவன் சித்தப்படி அரச பொறுப் பேற்றார். முடிசூட்டப் பெற்றதும் இறைவனின் ஆலயஞ் சென்று வழிபட்ட பின் யானை மீதேறி நகர் வலம் வந்தார். சேரமான் பெருமான் சோழ பாண்டிய மன்னர்களுடன் நட்புடனும் சிவ நேயமும் சைவப் பாரம்பரியமும் அறநெறியும் வழுவாது பணி புரிந்தார். இவரின் அரசாட்சியில் பல வளங்களும் பெருகிய சைவமும் அறமும் வளர்ந்தன.

இவர் தில்லை நடராசப் பெருமானே தம்மை உய்வித்தார் என்றும் பக்தியால் தினமும் நடராசப் பெருமானுக்குச் சிவபூசை வழிபாடுகள் செய்து திருவமுது படைத்துத் தூப தீபங்காட்டி நறுமலர்களால் அர்ச்சித்துப் பூசிப்பார். தினமும் பூசை முடிவில் நடராசப் பெருமான் இவரின் பூசையைத் தாம் ஏற்ற அறிகுறியாகக் காற்சிலம்பொலியைக் கேட்க வைப்பார். இவரின் இறைபக்தி மேலோங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலவாய் சோமசுந்தரப் பெருமானின் நட்பின் அற்புதம்

சேரமான் பெருமான் சிவபெருமான் மீது கொண்ட இடையறாத பக்தித் தொடர்பால் ஆலவாய் சோமசுந்தரப் பெருமான் தமது ஆலயத்தில் தினந்தோறும் பண்ணிசை பாடும் பாணபத்திரர் என்பவரின் வறுமையை நீக்கச் சித்தங்கொண்டார். இறைவன் சேரமானுக்கு எழுதிய திருமுகப் பாசுரத்தில் தமது அன்பரான பாணபத்திரனுக்கு வேண்டிய பொன்னும் பொருளும் வழங்குமாறு எழுதியிருந்தார். இதனைப் பாணபத்திரனின் கனவிற் தோன்றிச் சேரமானிடம் தமது திருமுகப் பாசுரத்தைக் கொண்டு போய்க் கொடுக்குமாறு தெரிவித்தார்.

"மதிமலி புரசை மாடக்கூடல்
பதிமிசை நிலவு பால்நிறவரிச்சிறகு
அன்னம்பயில் பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப்படியெனப் பாவலர்க்கு
உரிமையின், உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வர விடுவிப்பதுவே"

தமிழ்ச்சங்கப் புலவராகிய சிவபெருமான் எழுதிய இத் திருமுகப் பாசுரம் பன்னிரு திருமுறைகளுள் பதினோராம் திருமுறையின் முதற்பாடலாக அமைந்ததும் இறையருளின் பேறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இத்திருமுகப் பாசுரத்தைப் பாணபத்திரனிடம் கொடுத்ததும் அவர் அதனைத் தன் தலைமீது வைத்துக்கொண்டு சேரமான் பெருமானிடஞ் சென்றார். பாணபத்திரன் வருவதை அறிந்ததும் சேரமான் பெருமான் அடியாரை பல வரவேற்புடன் எதிர்கொண்டழைத்துத் திருமுகத்தை வாங்கிப் படித்தார். அதனைத் தலைமேல் வைத்துப் புகழ்ந்து பாடிப் பாணபத்திரரை அரவணைத் தார். வேண்டிய சகல பொன், பொருள்களைத் தந்து ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். பாணரும் தமது தேவைக்கேற்ப எடுத்துக்கொண்டு விடைபெற்றார். சேரமான் பாணபத்திரருடன் நகர்ப்புறம்வரை சென்று வழியனுப்பினார். பாணபத்திரன் இறை யருளை வியந்து மதுரையை அடைந்தார்.

## இறைவனின் மூலம் நம்பியாரூரரின் நட்பு

ஒரு நாள் சேரமான் பூசை செய்து நிறைவில் சிலம்பொலி கேட்கவில்லை. இதனால் மனம் வெதும்பித் தாம் ஏதோ தவறு செய்ததாக அழுதார். தமது தவறுக்காகத் தமது உடைவாளை உருவி மார் மீது வைத்து உயிரைத் துறக்க முற்பட்டார். அச்சமயம் சிலம்பொலி மிக அற்புதமாக ஒலித்தது. மன்னனின் வாள் கீழே விழுந்தது. கைகளைத் தலைமீது கூப்பிய வண்ணம் வீழ்ந்து வணங்கினார். பெருமானே முன்னமே சிலம்பொலி தராமல் விட்டதென்ன? என்றார். அச்சமயம் இறைவன் சுந்தரமூர்த்தி நாயனாரை அறிமுகஞ் செய்யச் சித்தங்கொண்டதால் "சேரனே தில்லையில் திருநடனஞ் செய்தபோது எனது வன்றொண்டர் வந்து தீந்தமிழில் பதிகம் பாடினார். அதன் பக்தியில் என்னால் உடன் வரமுடியவில்லை" என அசரீரியாக உரைத்தார்.

எம்பெருமானின் அசரீரி கேட்ட சேரன் அடியவர்களுக் கருளும் ஆடல்பிரானின் திருநடனக் காட்சியைக் காண விரும் பினார். தமது உதவியாட்கள் மற்றும் சேனைகளுடனும் புறப்பட்டுத் தில்லையம்பலத்தை அடைந்தார். சேரன் தமது பக்தி மேலீட்டினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்வண்ணத்திருவந்தாதி பாடிக் கூத்தர் பிரானின் திருவடியை வணங்கினார். தில்லைக்கூத்தர் தமது திருநடனத்தைச் சேரனுக்குக் காண்பித்தார். இறைவனின் ஆனந்தக்கூத்தைக் கண்ணுற்ற சேரன் பல நாட்கள் அவ்விடத்தில் பூசைகள் யாவற்றையும் கண்டு இன்புற்றார். வன்றொண்டரான சுந்தரரைக் காண்பதன் பேரில் திருவாரூரை நாடினார்.

சேரமான் பெருமான் வருவதை அறிந்த நம்பியாரூரர் எதிர்கொண்டழைத்துக் கட்டியணைத்து வணங்கியதும் திருவாரூர்க் கோயிலுக்குச் சென்று வழிபட்டனர். அச்சமயம் சேரமான் நம்பியாரூரரின் முன்னிலையில் இறைவன் மீது "மும்மணிக் கோவையைப்" பாடினார். பின்னர் இருவரும் பரவையாரின் இல்லமேகி இறைவன் புகழை வியந்து உரையாடினர். அங்கு நடைபெற்ற பல விருந்துபசரணைகளில் கலந்து இன்புற்றார். இதனால் நம்பியாரூரருக்கும் சேரமானுக்கும் இணை பிரியாத நட்பு ஏற்பட்டது. இருவரும் பல்வேறு ஆலய தரிசனத்தையுஞ் செய்தனர்.

சுந்தரரின் பிரியாத நட்பும் சேரனின் சிவபக்தியும் ஒன்றிணைய இறையருட் சித்தப்படி சுந்தரர் யானை மீதேறிக் கயிலைக்குச் சென்றார். இதனையறிந்த சேரமான் பெருமான் தமது குதிரை மீதேறி நம்பியாரூரரைத் தொடர முற்பட்டார். குதிரையின் காதுகளில் திருவைந்தெழுத்தை ஓதினார். குதிரை விண்ணில் தாவிப் பாய்ந்து ஓடி நம்பியாரூரரின் யானையை வலம் வந்து யானை முன்பாகச் சென்றது. இருவரும் கயிலையை அடைந்ததும் தென்திசைத் திருவாயிலில் சேரமான் தமது குதிரையிலிருந்தும் நம்பியாரூரர் யானையிலிருந்தும் இறங்கினர். இருவரும் இறைவனின் திருவாயிலை நோக்கி நெடுந்தூரம் சென்றனர். இறைவனின் திருவாயிலில் சேரமான் தடைப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாரூரர் நேரிற் சென்று இறைவனை வணங்கித் தமது தவறுதலுக்காகப் பரிந்து பேசி இறைவனால் ஏற்கப்பட்டார். அதேசமயம் தம்முடன் கூடவந்த சேரமான் வெளியே வாசலில் வந்து நிற்பதையும் நம்பியாரூரர் தெரிவித்தார். இறைவன் சேரமானைத் தமது நந்தி மூலம் அழைத்தார். சேரமான் பெருமான் நாயனார் இறைவனின் கழலடியில் வீழ்ந்து வணங்கிப் போற்றித் துதித்து நின்றார். சேரமான் நம்பியாரூரர் யானை மீது பவனி வரும்போது அவரின் அடி தொழுத வண்ணம் கயிலையை அடைந்தேன். இறையருள் உள்ளே அழைத்தது என்று தாம் உள்ளே வந்ததைக் கூறினார். அச்சமயம் சேரமான் தாம் பாடிய திருக்கயிலை ஞான உலா என்னும் பந்தத்தை இறைவன் மீது பாடியதையும் ஒப்படைத் தார். இதனால் மகிழ்ந்த இறைவன் சேரமான் பெருமானுக்கும் நம்பியாரூரரான ஆலாலசுந்தரருக்கும் பூதகணங்களின் தலைமைப் பதவியை வழங்கிப் பெருமைப்படுத்தினார்.

சேரமான் இளவரசராக இருந்தபோது சகல இறைபணி களையும் செய்து இறைவன் மீது பாடியும் அறப்பணி செய்தவர். தில்லை நடராசப் பெருமானைப் பூசித்து நிறைவில் தினமும் சலங்கை ஒலியால் திருப்தியடைந்தவர். திருவாலவாய் சோம சுந்தரப் பெருமானின் திருமுகப்பாசுரம் பெற்று அவரின் அடி யவருக்கு வேண்டியன தரும் பேறு பெற்றவர். நம்பியாரூரரின் நட்பால் கயிலையை மனித உடலுடன் சென்று சிவபூத கணங்களின் தலைமைப் பதவி ஏற்றவர். ஆலயப் பணி செய்து சிவப்பேறு பெற்றவர் சேரமான் பெருமான் நாயனார் என 63 நாயன்மார் பட்டியலில் இடம்பெற்ற சிவபக்தராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. குளத்து நீரில் திருவிளக்கேற்றிய நமிநந்தி அடிகள்

சோழவளநாட்டின் ஏமப் பேரூரில் அவதரித்த அந்தணர் குலத்தவரான நமிநந்தி அடிகள் சைவம் போற்றும் திருத் தொண்டராவார். இவர் இறைவன் மீதிருந்த பேரன்பினால் எந்த நேரமும் இறைவன் திருவடியையே போற்றி வாழ்ந்தார். தினந்தோறும் தமது வீட்டிலிருந்து ஆறு மைல் தூரத்திலுள்ள திருவாரூருக்குச் சென்று வழிபட்டு வந்தார்.

ஒரு நாள் இவர் அறநெறி என்னும் ஆலயத்திற்கும் சென்று வழிபட்டார். பின் அவ்வாலயத்திற் பல தொண்டுகள் செய்தார். நேரம் மாலையானதும் அவ்விடத்தில் தீபமேற்றும் தொண்டு செய்யவும் எண்ணினார். மாலைவேளை கடைக்குப் போய் நெய் வாங்கிவர நேரமாகிவிடும் என்பதால் அருகிலுள்ள ஒரு வீட்டுக்குச் சென்று தீபமேற்ற விளக்குக்கு நெய் தருமாறு கேட்டார். அந்த வீட்டில் வசித்த சமணர்கள் உங்கள் கடவுள் கையில் நெருப்பை ஏந்தியுள்ளார். அவருக்கு விளக்கு எதற்கு என ஏளனமாகக் கூறியவர் இங்கு நெய்யில்லை வேண்டுமானால் தண்ணீர் விட்டு விளக்கு ஏற்றுமாறு கூறினார்.

இதைக்கேட்ட நமிநந்தி அடிகள் மனம் வருந்தி ஆலயஞ் சென்றார். மிகுந்த வேதனையுடன் ஆலய வாசலில் வீழ்ந்து வணங்கித் தமது கவலையை இறைவனிடம் முறையிட்டார். அச்சமயம் விண்ணிலிருந்து அசரீரி ஒலித்தது. "நமிநந்தியே உன் கவலையை விடுக. இங்கு அருகிலுள்ள குளத்து நீரை முகந்து கொண்டு வந்து விளக்குகளுக்கு விட்டுத் தீபத்தை ஏற்றுக" என்றது.

இச்செய்தி கேட்டதும் நமிநந்தியடிகள் இறையருளை வியந்து வணங்கியவர் திருவைந்தெழுத்தை ஓதிய வண்ணம் குளத்துக்குள் இறங்கி இறைவனின் வழிகாட்டலின்படி குடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரெடுத்தார். இறைவனின் பேரருளால் அறநெறி அப்பனின் திருக்கோயிலை அடைந்ததும் விளக்கில் திரியிட்டு குளத்து நீரை விட்டுத் தீபமேற்றினார். விளக்கு நன்கு சுடர் விட்டெரிந்து பிரகாசித்தது. தொடர்ந்து இவ்வாலயம் முழுவதும் குளத்து நீரினால் விளக்கேற்றினார். யாவும் நன்கு பிரகாசித்து எரிந்தது. முன்னர் நெய் கேட்டபோது பரிகாசம் செய்த சமணர்கள் வெட்கித் தலை குனியவும் நாடெல்லாம் போற்றவும் நமிநந்தியடிகள் குளத்து நீரை நிறைய விட்டு விடியும் வரை விளக்கேற்றினார். இதனால் இறைவனின் சித்தப்படி நெய்க்குப் பதிலாக குளத்து நீரை விட்டு நன்கு பிரகாச மாக விளக்கேற்றிய நமிநந்தியடிகள் தம்மை நெறிப்படுத்திய அறநெறி அப்பரைப் பலவாறு துதித்துப் போற்றி இன்பம் பெற்றார்.

இச்சமகாலத்தில் திருவாரூர் ஈசனின் பேரருளால் திருக் குளத்தொண்டு செய்த தண்டியடிகள் என்னும் தவசீலருடன் பொருதிக் கண்ணிழந்து திருவாரூரை விட்டுச் சமணர்கள் விரட்டப் பட்டனர். இதே போல நமிநந்தியடிகள் தீபமேற்றும் தொண்டில் குளத்து நீரால் தீபமேற்றியதும் திருவாரூர் அப்பனின் பேரருளாகும். சிவனடியார்களின் தூய பணியால் பெருமை பெற்ற திருவாரூர் சமணர்களின் இடையூறின்றி சைவப்பொலிவுடன் பிரகாசிக்கும் சிறப்பையும் பெற்றது.

நமிநந்தியடிகளின் திருத்தொண்டை வியந்த சோழ மன்னன் புற்றிடங் கொண்ட ஈசனின் ஆலயத்தில் தினப்படி நிவேதனப் பொருட்களுக்குப் பல நிபந்தங்களை அமைத்தான். இவற்றைச் சைவாகம விதிப்படி நடாத்தும் தலைமைப்பொறுப்பில் நமிநந்தியடி களையே நியமித்தான். திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானின் திருவிளையாடல் பெருந்திருவிழாக்களையும் பங்குனி உத்தரத் திருவிழாவையும் நடாத்த விரும்பிய நமிநந்தியடிகள் இறைவனிடம் முறையிட்டார். நமிநந்தியடிகளின் விண்ணப்பத்தின் பேரில் தியாகேசப் பெருமானின் பங்குனி உத்தர விழாக்கள் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தன. இவ்விழாவில் ஒரு நாள் தியாகேசரின் திருவுருவம் அயலிலுள்ள திருமணலிக்கு எழுந்தருளியது. ஊரிலுள்ள சகல குலத்தவரும் வேற்றுமை காட்டாது அவ்விழாவில் கலந்து தரிசித்து இன்புற்றனர். திருமணலியில் நடைபெற்ற தரிசனையில் நமிநந்தி அடிகளும் கலந்தவர். விழாவின் போது கலந்து கொண்ட அனைவரும் திருமணலியிலிருந்து எம்பெருமானின் வீதியுலாவுடன் திருவாரூருக்குத் திரும்ப வெகுநேரமானது. நமிநந்தியடிகள் இறைவனை வணங்கியதும் தமதில்லத்தை நாடினார். வந்தவர் நேரே வீட்டு வாசலால் உட்செல்லாது புறக்கடைக்குச் சென்று உறங்கிவிட்டார்.

நமிநந்தியடிகளின் மனைவி வந்து கணவனின் பூசைக் கருமங்களை முடித்துவிட்டு உணவருந்துமாறு கேட்டார். அவர் ஆலய தரிசனையில் பல குலத்தவருடன் சென்றதால் தீட்டு ஏற்பட்டது. காலையில் செய்யலாமெனக் கூறிவிட்டு உறங்கினார். அவரது கனவிற் தோன்றிய இறைவன் "ஞானவேதியனே திருவாரூரில் பிறந்த அனைவரும் நமது கணத்தவர்கள் என்பதை உணர்வாய்" எனக் கூறி மறைந்தருளினார்.

நமிநந்தியடிகள் தமது தவறை எண்ணி இறைவனிடம் வழிபட்டதுடன் வீட்டினுட் சென்று தமது கடமைகளை நிறை வேற்றினார். விடிந்ததும் திருவாரூர் சென்றதும் அங்குள்ள யாவரும் சிவகணங்களாகக் காட்சியளித்தனர். தமது தவறுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்டார். பின் யாவரும் முன் போலக் காணப்பட்டனர். அவர் இறையருளை வியந்தார். இறைவனின் பேரருளால் திருவாரூரையே வதிவிடமாகக் கொண்டு இவ்வாலயத்தில் தொண்டுகள் பல செய்தார். இவரை அப்பர் சுவாமிகள் தொண்டர் களுக்கு "ஆணிப்பொன்" எனப் பாடல் பாடிச் சிறப்பித்தார். நமிநந்தி யடிகள் 63 நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. திருவிளக்கேற்றும் தொண்டாற்றிய கலிய நாயனார்

தொண்டை நாட்டின் திருவொற்றியூர் சிவாலயப் பெருமையால் அங்கு வாழும் மக்கள் பலரும் சிவப்பணியாற்றும் பேறு பெற்றவர்கள். திருவொற்றியூரில் எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழில் புரியும் சங்கரப்பாடி தெருவில் கலியர் என்னும் தொண்டர் அவதரித்தார். இவர் பிறந்த மண்ணின் சிறப்பால் சிவப்பணியில் இணைந்தார். இவர் தமது தொழில் மூலம் மிகுந்த நிதிவளம் பெற்றதால் அவ்வூர் சிவாலயத்தில் திருவிளக்கேற்றும் தொண்டைச் செய்தார். இவரின் நிதிவளமும் சிவப்பணி ஆர்வமும் உந்தியதால் திருவொற்றியூர் சிவாலயத்தில் உள்ளும் புறமும் பகலும் இரவும் நெய்விளக்கேற்றும் பணியில் சிறந்து விளங்கினார்.

நீண்ட காலமாக எண்ணில்லாத திருவிளக்கேற்றிய கலிய நாயனாரின் மெய்த்தொண்டை உலகறியச் செய்ய இறைவன் சித்தங் கொண்டார். இதனால் கலிய நாயனாரின் நிதிவளம் சுருங்கியது. தாம் வறுமையுற்றபோதும் திருவிளக்கேற்றும் தொண்டைத் தொடர்ந்தார். அவ்வூர் செல்வந்த வணிகர்களிடம் எண்ணெய் வாங்கி விற்று உரியவரிடம் கொடுத்து அதில் வரும் இலாபத்தை எடுத்துத் திருவிளக்கேற்றினார். சில காலத்தில் எண்ணெய் கொடுப்பவர்கள் தர மறுத்தனர். இதனால் வேதனை அடைந்தார். மனந்தளராமல் எண்ணெய் ஆட்டும் செக்கு இருக்கும் இடங்களில் கூலி வேலை செய்து கிடைக்கும் பணத்தில் திருவிளக்கேற்றினார். இவரின் பணியில் மேலும் பலரும் சேர்ந்ததால் வந்த வருவாய் முட்டுப்பாடடைந்தது.

இதனால் நிதி முடங்கினாலும் தமது வீட்டு உடமைகளையும் தொடர்ந்து வீட்டையும் விற்று விளக்கேற்றும் தொண்டாற்றினார். அப்பணமும் சில காலத்தில் சுருங்கியது. இச்சமயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியாரின் பூரண சம்மதத்துடன் மனைவியை விற்று விளக் கேற்ற முற்பட்டார். மனைவியை அழைத்துக் கொண்டு திருவொற்றி யூர் எங்கும் சென்றும் எவரும் மனைவியை வாங்க முன்வரவில்லை. இதனால் வேறு வகையில்லாமல் திருவொற்றியூர் கோயிலை வந்தடைந்தார்.

தம்மையொரு பக்தனாக ஏற்றுத் தமது திருப்பணியை ஏற்றருளும் இறைவன் சந்நிதியில் அழகு நிறையும் விளக்கெரியும் சமயத்தில் தமது மணிவிளக்கு ஏற்றும் பணி நின்றுவிட்டதால் தான் மாள்வது மேல் என்றெண்ணினார். அதன் நோக்கில் எல்லா விளக்குகளையும் எடுத்து அதற்கான திரிகளையிட்டுத் தனது இரத்தத்தால் விளக்கேற்ற எண்ணினார். ஒரு கத்தியால் தனது கழுத்தை அறுக்க முயன்றார். அச்சமயம் இறைவன் கழுத்தை அறுக்கும் கையைப் பிடித்து ஆட்கொண்டார்.

கலியனாரின் முன் மழவிடை மேலிருந்து இறைவன் காட்சி தந்தார். கலியனாரின் கழுத்தில் ஏற்பட்ட ஊறும் நீங்க நல்ல பிரகாசத்துடன் கலியனார் தலைமேல் இரு கைகளையும் கூப்பி வணங்கினார். இறைவன் கலியனாரைத் தமது சிவலோகத்தில் சிறப்புற்று வாழ அருள் பாலித்தார். சிவாலயத்தில் திருவிளக் கேற்றும் திருத்தொண்டு வறுமையால் தடைப்பட்ட போது தன் கழுத்தையே அறுக்க முற்பட்ட கலிய நாயனார் இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்டுச் சிவலோக பதவி பெற்றார். இதனால் கலிய நாயனார் 63 நாயன்மாரில் ஒருவராக அமையும் பேறும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. குங்கிலியக்கலய நாயனார்

சோழ நாட்டில் திருக்கடவூர் என்னும் புண்ணிய பதியில் வேதியர் குலத்துதித்த கலயனார் பல வளங்களும் சிறப்படைய வாழ்ந்தார். தமது வாழ்வாதாரப் பணிக்கு மேலாக இப்பதியில் குடிகொண்டுள்ள அமிர்தகடேஸ்வரரின் ஆலயத்தில் தினமும் குங்கிலிய தூபமிட்டு மகிழ்ந்தார். இவர் குங்கிலிய தூபத்தையே பேறாக எண்ணித் தொண்டாற்றியதால் குங்கிலியக்கலயர் என அழைக்கப்பெற்றார். இவரின் இடையறாத பணியைச் சோதிக்க எண்ணிய இறைவன் இவரை வறுமையில் ஆழ்த்தினார். தமது மேலதிக நிலங்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள் யாவற்றையும் விற்றே தடையில்லாமல் குங்கிலிய தூபமிட்டார்.

வீட்டில் உண்ணுவதற்கே ஏதுமற்ற நிலையில் இவரின் மனைவி, புதல்வர்கள், இவரை நாடி வந்த உறவினர்கள் யாவரும் இரு நாட்களாகப் பட்டினி இருந்தனர். பசியால் வாடிய புதல்வர் களின் பரிதாபத்தை நோக்கிய கலயரின் மனைவி யாவும் விற்று எஞ்சிய தமது மங்கலமான தாலியைத் தமது கணவரிடம் கொடுத்து சமைப்பதற்காக உணவுப் பொருட்களை வாங்கி வருமாறு கொடுத் தாள். கலயர் தாலியை வாங்கிக்கொண்டு நகரத்திற்குச் செல்கிறார். அச்சமயம் ஒரு வணிகன் ஒரு பொதியுடன் எதிரில் வந்தான். கலயர் அவனை நோக்கி இது என்ன பொதி எனக் கேட்டார். அவன் குங்கிலியப் பொதியென்றான். இறைவனுக்குக் குங்கிலியப் புகையூட்டி மகிழ்ந்தவர்; தமது குடும்பத்தின் பசிபோக்கவெனக் கொடுத்த தாலியைக் கொடுத்துக் குங்கிலியத்தை வாங்கினார்.

கலயனார் இறைவனுக்குத் தூபமிடும் பேரவாவினால் தமது குடும்பம் வறுமையால் இருநாட் பட்டினியாயிருப்பதையும் மறந்தார். குங்கிலியப் பொதியை வாங்கியதும் தமது வீட்டையே சிந்திக்காது நேராக அமிர்தகடேஸ்வரரின் ஆலயத்திற்குச் சென்றார். எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானை வழிபட்டார். குங்கிலியத் தூபமிட்டு மகிழ்ந்தார். தொடர்ந்து இரவு கோயிலிலேயே தூபத்தொண்டில் மகிழ்ந்தவாறு சிவத்தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

கலயனாரின் மனைவியுட்பட யாவரும் பசியால் வாடியதும் உறங்கிவிட்டனர். பக்தனின் பக்தியை மெச்சிய இறைவன் குபேரன் மூலம் கலயரின் வீடு முழுவதும் பொன்னும் உணவுப் பண்டங்களுமாக தாராளமாக நிறைத்துவிட்டார். அச்சமயம் இறைவன் கலயரின் மனைவியின் கனவிற் தோன்றி வீட்டில் வேண்டிய பொருட்கள் நிரம்பியுள்ளது. எழுந்து பசியால் வாடியுள்ள யாவருக்கும் உணவு தயாரிக்குமாறு இயம்பினார். துயிலெழுந்த மனைவி தமது வீட்டையே நோக்கினார். வேண்டியளவு இப் பொருட்களை வழங்கியது எம்பெருமானே என அறிந்ததும் இறைவனை வணங்கிவிட்டு யாவருக்கும் உணவு தயாரிக்கலானார்.

இதேவேளை கலயர் அறியும் வண்ணம் "பசியையும் மறந்து தூபத்தொண்டாற்றும் உமக்கு வீட்டில் சமையல் நடக்கிறது. வீட்டுக்குச் சென்று பசியாறலாம்" என்று அசரீரி ஒலித்தது. கலயர் இறையருளை வியந்து இறைவனை வணங்கிவிட்டு இல்லமேகினார். வீட்டில் வகை தொகையின்றி வீடு நிறையப் பொன்னும் பொருட்களும் நிறைந்திருந்ததை நோக்கினார். மனைவியிடம் இவை எவ்வாறு கிடைத்தது எனக் கேட்டார். மனைவி இறையருளை வியந்தார். இருவரும் மீண்டும் இறையருளை எண்ணிப் போற்றி மகிழ்ந்தனர்.

இறைவன் தந்தது தமது சிவனடியார்களுக்கும் உரியதாகும் என்பதால் சிவனடியார்களையும் அழைத்து அறுசுவை விருந்தளித்து மகிழ்ந்தனர். கலயரின் வீட்டில் தினமும் சிவனடியார்களுக்கு அறுசுவையுண்டி வழங்குவதில் கலயரும் குடும்பத்தினரும் மகிழ்வடைந்தனர். வழமைபோல் கலயர் தமது நித்திய பணியான தூபத்தொண்டை இறைவனுக்கு அர்ப்பணித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாடகைப்பிராட்டியின் தொண்டு

இச்சமகாலத்தில் திருப்பனந்தாள் சிவாலயத்தில் நாள் தவறாது பூமாலை புனைந்தேற்றும் பணியை ஏற்றவர் அவ்வூர் தாடகை என்னும் மூதாட்டியார். இவர் தினம் ஆலய நந்தவனத்தில் ஆசார சீலத்துடன் நறுமலர் கொய்து ஆலயத்திலிருந்து மாலை தொடுத்துச் சாத்தி வந்தார். ஒரு நாள் தாடகைப் பிராட்டியார் பூமாலை கட்டி முடிந்ததும் மாலையைக் கையில் எடுத்துக்கொண்டு எம்பெருமானுக்குச் சாத்தவென எழுந்தார். அச்சமயம் இவரின் ஆடை சற்று நெகிழ்ந்தது. கையில் பூமாலை இருந்ததால் ஆடையை நெகிழவிடாது தமது ஒரு முழங்கையால் அணைத்தபடி சிவலிங்கப் பெருமானை நாடினார். இதனால் மாலையை இலிங்கத்தின் மீது போட முடியாததை எண்ணினார். அச்சமயம் இலிங்கப் பெருமான் சற்றுச் சரிந்து பூமாலையை ஏற்றார். அந்த வேளை முதல் இலிங்கம் சரிந்தே காணப்பட்டது.

அன்று வழமைபோல ஆலயத்தை வழிபட வந்த சோழ மன்னன் சாய்ந்திருந்த இலிங்கத்தை நேராக நிறுத்தி வைத்தே வணங்க வேண்டுமென எண்ணினான். தனது யானை மற்றும் சேனைகள் மூலம் கட்டி இழுப்பித்தான். யாவரும் களைத்து விழுந்துவிட்டனர். எழ முடியவில்லை. மன்னன் இலிங்கத்தை நேராக நிறுத்தி வழிபட்டே தான் அவ்விடம் விட்டகல்வது என்னும் சிந்தனையில் ஆலயத்திலேயே அமர்ந்திருந்தான்.

இச்செய்தியை அறிந்த குங்கிலியக்கலய நாயனார் திருப் பனந்தாள் ஈசனை உள்ளன்போடு வழிபட வந்தார். அங்குள்ள நிலையை உணர்ந்தார். அங்குள்ள பூங்கச்சுடன் பலமான கயி றொன்றையும் இணைத்துச் சாய்ந்திருந்த இலிங்கத்தின் மீது கட்டினார். மறுமுனையைத் தமது கழுத்தில் மாட்டினார். இறை வனை உள்ளன்போடு பூசித்தவண்ணம் கழுத்தினால் இழுத்தார். கலயனாரின் அன்புக்கயிறு இலிங்கத்தை நேராக நிமிர வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக்கண்ட தேவர்கள் பூமாரி பொழிந்தனர். திருப்பனந் தாளில் நிறைவான மழை பொழிந்தது. வீழ்ந்து எழுந்திருக்க முடியாத யானை மற்றும் சேனைகளும் எழுந்தன. யாவரும் இறைவனைப் போற்றி வழிபட்டனர். சோழ மன்னன் கலய நாயனாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அருந்தொண் டாற்றிய கலய நாயனாரைப் போற்றிப் பெருமையடைந்தான். மேலும் இறைவனின் பெருங்கருணையை எண்ணி இவ்வாலயத்திற் பல திருப்பணிகளையுஞ் செய்ய முன்வந்தவன் இறைவனை மீண்டும் வணங்கி விட்டுத் தன் நகரையடைந்தான். கலய நாயனார் சில நாட்கள் அவ்விடத்திற் தங்கி வழிபட்ட பின் திருக்கடவூரை நாடித் தமது தூபப் பணியை மேற்கொண்டார்.

அக்காலத்தில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருக்கடவூர் இறைவனைத் தரிசிக்க எழுந்தருளியிருந்தனர். குங்கிலியக்கலய நாயனார் அவர்களிருவரையும் எதிர்கொண்டு வரவேற்று வணங்கியதும் தமது மனைக்கு அழைத்துச்சென்று அவர்களுக்கு ஏற்றவாறு அறுசுவையுண்டி வழங்கினார். சமய குரவர்களின் அன்பைப்பெற்ற குங்கிலியக்கலய நாயனார் தமது வழமையான குங்கிலியத் தூபமிடும் பணியையும் சிவனடியார் களுக்கு விருந்தளிக்கும் பணியையும் தொடர்ந்து செய்து இறை வனின் அருட்பார்வைக்கு வசமானார்.

## 6.சந்தனக் காப்பிடும் தொண்டால் உயர்ந்த மூர்த்தி நாயனார்

பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் பல சீர்வளங் களும் கொண்ட வணிகர் குலத்தில் மூர்த்தி நாயனார் என்னும் தவசீலர் அவதரித்தார். இவர் மதுரை சோமசுந்தரப் பெருமான் மீது இடையறாத பக்தி பூண்டவர். தமது பொழுதை அவப்பொழு தாக்காது சிவப்பொழுதாகவே மதித்து வாழ்ந்தவர். இவர் தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நித்திய கடமையாக இறைவனை வழிபட்டவர். தமது பக்தி மேலீட்டினால் தினமும் சோமசுந்தரப் பெருமானுக்குச் சந்தனக் காப்பிட்டு இறைவனின் அழகைக் கண்டு மகிழ்பவர். தூய சந்தனக் கட்டைகளைத் தேடி எடுத்து வேண்டியளவு வைத்திருப்பார். இதனால் மூர்த்தியரின் பணி நெடுநாட்களாகத் தொடர்ந்தது.

அக்காலத்தில் சமண சமயத்தைத் தழுவிய வடுக மன்னன் கர்நாடக மாநிலத்தின் ஆட்சியை உயர்த்துவதன் பேரில் தனது நால் வகைச் சேனைகளுடன் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்தான். ஈற்றில் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியதுடன் மதுரையில் அரசாண்டான். இதனால் சமண சமயம் மேலோங்கியது. சிவாலயங்கள் இயங்காதபடி சிவனடியார்களைத் துன்புறுத்தினான். சோமசுந்தரப் பெருமானுக்குத் தொண்டு செய்த மூர்த்தி நாயனாருக்குப் பல கெடுதிகள் செய்தான். மூர்த்தி நாயனார் கொடியவனின் துன்பங்களை நோக்காது சந்தனக் காப்பிடும் பணியைத் தொடர்ந்தார். இதனால் சினமுற்றவன் சந்தனக் கட்டைகள் ஏதும் கிடைக்காதவாறு தடை செய்தான். மூர்த்தி நாயனார் நல்ல சந்தனக் கட்டைகளைத் தேடிப் பகல் முழுவதும் அலைந்தும் ஏதும் கிடைக்காது இறைவனிடம் முறையிட்டார். இக்கொடியவனின் ஆட்சியில் சந்தனக்காப்பிட முடியவில்லையே, நல்லாட்சி புரியும் அரசன் எப்போது கிடைப்பான். அவ்வேளை எம்பெருமானுக்கு என் பணி செய்வேன் எனக் கவலையுடன் முறையிட்டார்.

மூர்த்தி நாயனாரின் சிவபக்தி உந்தியதால் உற்சாக மடைந்தார். சந்தனக்கட்டை இல்லாவிடினும் இதுவரை காலமும் சந்தனமரைத்த கை இருக்கிறதே என்று கூறித் தமது முழங்கையால் சந்தனமரைக்கும் கருங்கல்லில் தேய்த்தார். நாயனாரின் முழங்கை யின் தோல், தசை, என்பு யாவும் தேயவும் இரத்தம் வேகமாய் பாய்ந்தது. அவர் மேலும் தேய்த்ததும் முழங்கை தேய்ந்து என்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாரம் தென்பட்டு அதனூடாக மச்சை ஒழுகி வெளியே வந்தது. இதனைக் கண்டதும் சொக்கநாதப்பெருமான் தன் பக்தன் மீது கருணை கொண்டார். "ஐயனே மெய்யன்பின் துணையால் இச்செயலைச் செய்யாதே. உனக்குக் கேடு விளைவித்தவனின் அரசு முழுவதையும் நீயே பொறுப்பேற்பாய். முன்பிருந்த தீமைகளை விடுத்து நாட்டைக் காப்பாற்றுவதுடன் சந்தனக் காப்பிடும் தொண்டையும் செய்வாய். ஈற்றில் உன் சிவப்பணிக்காக சிவலோகத்தை அடைவாய்." என்று அசரீரி வாக்குரைத்தது. இதைக் கேட்டதும் மூர்த்தி நாயனார் இறைவனை வியந்து எழுந்தார். அவரின் கையிலேற்பட்ட ஊறு நீங்கி வழமைபோல் கை காட்சி தந்தது. மீண்டும் இறைவனை வணங்கி மகிழ்வடைந்தார்.

அன்றிரவு கொடிய சமண மன்னன் திடீரென மாண்டான். மனைவி முதலானோர் அழுது புலம்பினர். மந்திரிமார் அரசனின் உடலுக்கு மறுநாள் இறுதிக் கடன்களைச் செய்தனர். மாண்டு போன அரசனுக்கு மக்கட் பேறில்லை. அடுத்து அரசாளப் போவது யாரென மந்திரி பிரதானிகள் ஆலோசித்தனர். இறுதி முடிவாகப் பட்டத்து யானையின் கண்ணைத் துணியால் மூடிக்கட்டி அரசாளத் தகுந்த ஒருவரை அழைத்து வருமாறு அனுப்ப முன்வந்தனர். மறுநாள் பட்டத்து யானை அனுப்பப்பட்டது. அது மதுரை வீதியெல்லாம் சுற்றி வந்த பின் சொக்கநாதப் பெருமானின் ஆலய வாசலை அடைந்தது.

அச்சமயம் மூர்த்தி நாயனார் இறைவனின் சித்தம் இது வானால் நான் சிறப்பாகப் பணியை ஏற்பேன் என்று கூறித் திருக் கோயிலின் ஒருபுறத்தே நின்றார். அச்சமயம் பட்டத்து யானை மூர்த்தி நாயனாரின் முன் பணிந்து தாழ்ந்து நின்றதும் நாயனாரைத் துதிக்கையால் தூக்கித் தனது முதுகில் ஏற்றியது. அச்சமயம் மந்திரிகள் யாவரும் வியப்புடன் நாட்டின் துன்பங்கள் நீங்க ஒரு சிவனடியாரே அரசராவது எமது பேறாகும் எனக்கூறி மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயனாரின் திருவடிகளை வணங்கினர். அச்சமயம் ஊர் மக்கள் யாவரும் மகிழ்ந்து ஆரவாரஞ் செய்தனர். பல்சுவை வாத்தியங்கள் ஒலித்தன. ஏற்கெனவே முடிசூட்டு விழாவிற்கென அலங்கரித்த மண்டபத்தின் முன் யானை மூர்த்தி நாயனாரை இறக்கியது. அச்சமயம் மூர்த்திநாயனார் உரிய சிம்மாசனத்தில் அமர்த்தப் பட்டார். உரிய விதிமுறைப்படி முடிசூட்டு விழா ஏற்பாடானது. இப்போ சமணம் மறைந்துள்ளது. சைவம் ஓங்கினால் தான் அரசபணி ஏற்பேன் என மூர்த்திநாயனார் கூறினார். அச்சமயம் அமைச்சர்களும் பிரதானிகளும் நீங்கள் இடும் கட்டளையை நாம் ஏற்போம். அரசு சிறப்படைவதே எமது விருப்பாகும் என்றனர். இந்த அரசில் விபூதி, உருத்திராக்கம், சடாமுடி ஆகியவையே என் ஆட்சிக்குரியவை என்றார். யாவரும் பூரண திருப்தியென மகிழ்ந்தனர்.

மூர்த்தி நாயனார் முடிசூட்டு வைபவம் முடிந்ததும் நேராக திருஆலவாய் திருக்கோயில் சொக்கநாதப் பெருமானை வாழ்த்தி வணங்கினார். அதன்பின் பட்டத்து யானை மீதேறி மதுரை நகரவீதியெல்லாம் பவனி வந்தார். பவனி முடிந்ததும் அரச அரண்மனைக்கு வந்து அரியணை ஏறினார். மூர்த்தி நாயனாரின் ஆட்சியில் சமண சமயமும் அதன் சார்பில் சைவ மக்களை வருத்தியோரும் அகன்றனர். சிவ சின்னங்களான திருநீறு, உருத்திராக்கம் நிலைபெற்றது. சைவசமயம் முன் போல மேலோங்கியது. குடி மக்கள் யாவரும் நல்லாதரவு தந்தனர். மூர்த்தி நாயனார் முன்கூறிய படி விபூதி, உருத்திராக்கம், சடாமுடி ஆகிய மும்மையினால் மதுரையை அரசாண்டார்.

இவர் தமது பாரம்பரிய சைவ மரபுப்படி புலனடக்கத்துடன் இல்லறத்தை நாடாது சிறந்த ஒழுக்க சீலராக வாழ்ந்தார். உட்பகை, புறப்பகை யாவற்றையும் நீக்கிப் பகையரசர்களை வென் றொழித்தார். நாட்டு மக்களை நீதியுடன் சிறப்பாக வாழ வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து நீடிய காலம் அரசாண்டார். அரச பதவி ஏற்றாலும் அக் காலத்திலிருந்து தமது நித்திய தொண்டாக இறைவனுக்குச் சந்தனக் காப்பிடும் பணியை மேற்கொண்டார். இறைவனின் சித்தப்படி நல்லாட்சி நிறைவில் இறைவனடி சேர்ந்தார்.

இறைவனுக்காக முழங்கையைத் தேய்த்த பக்தன் இறை வனருளால் யானை மீதேறிச் சென்று அரச பணியேற்று திருநீற்றின் ஒளி துலக்கி சைவத்தை நிலை நாட்டினார். மூர்த்தி நாயனார் 63 நாயன்மாரின் ஒருவரானார்.

## 7. நந்தனார் (திருநாளைப் போவார்)

தஞ்சாவூர் மாவட்டத்தின் தஞ்சையில் மேல் ஆதனூர் என்னும் சிற்றூரில் புலையர் சேரியில் அவதரித்தவர் நந்தனார். இவர் வாழ்ந்த புலையர்சேரி அவ்வூர் குடிமக்களுக்காக வழங்கப்பட்ட காணித் தொகுதியாகும். தமக்கென நிலையான வேலை வாய்ப் பற்றதால் நிலப்பிரபுக்களின் காணியில் ஆண்டான் அடிமை என்ற ரீதியில் விவசாயப் பணிபுரிந்தவர்கள் சிறுகுடிசைகளில் வாழ்ந்தனர்.

நந்தன் முன்வினைப்பயனாக சைவசமயப்பற்றில் மிகுந்து காணப்பட்டார். ஆலயத்தினுட் செல்ல முடியாது ஒதுக்கப்பட்டாலும் ஆலயங்களில் புறவீதியில் நின்று வணங்கியும் ஆலயத் தொண்டில் தன்னை அர்ப்பணித்தும் வந்தார். புலைச்சேரியில் இறைச்சிக்காக உரிக்கும் கால்நடைகளின் தோல்களைப் பாதுகாப்பாக எடுத்துப் பதனிட்டு வைத்திருப்பார். எருது மாடுகளின் ஏரியில் கிடைக்கும் கோரோசனையையும் எடுத்து அவ்வப்போது ஆலயங்களில் நடைபெறும் அபிஷேகப் பாவனைக்காக வழங்கினார். ஏற்கெனவே பதனிட்ட தோலை ஆலயங்களின் பயன் பெறும் பேரிகை, மிருதங்கம் முதலான கருவிகளின் பாவனைக்கும் அதனை இறுகக் கட்டும் வார்க்கயிறாகவும் வழங்கினார். மேலும் வயலின், வீணை போன்றவற்றின் நரம்புகளுக்குப் பாவிக்கவும் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தன் அச்சூழலிலுள்ள எல்லாக்கோயில்களையும் தமது பணியின் ஓய்வு நேரங்களிற் சென்று தரிசித்தார். சிதம்பரம் போன்ற தூர இடங்களிலுள்ள ஆலயங்களுக்குச் செல்வதானால் தமது பணியின் ஆண்டானான வேதியரிடம் அனுமதி பெற வேண்டும். தன்னோடொத்த சேரி நண்பர்களையும் தம்முடன் வருமாறு அழைப்பார். அவர்கள் எசமானுக்குப் பயந்து செல்லாத போதும் இறைவனைப் பற்றியும் விழாக்களைப் பற்றியும் யாவருக்கும் ஆடியும் பாடியும் காண்பிப்பார். ஆலயங்களுக்குச் செல்லும் போது நன்கு பாடுவார் ஆடுவார். இவ்வாறு தனது இறைவன் மீதுள்ள பக்தியை வெளிப்படுத்துவார்.

## நந்தி சற்று விலகியது

ஒரு சமயம் திருப்புன்கூர் சிவாலயத்திற்கு வணங்கச் சென்றார். வழமையாக புலைச்சேரி மக்கள் ஆலயத்திற்குட் செல்ல முடியாது. வெளியே தொலைவில் நின்றே தரிசிக்கலாம். நந்தன் திருப்புன்கூரில் சிவலோகநாதனை வழிபடச் சென்றபோது ஆலயத்தின் முன்னால் உள்ள பெரிய நந்தி இறைவனைத் தெரிய விடாது மறைத்தது. நந்தன் பக்தி மிகுதியால் இறைவனை நோக்கி "வழிமறைத்திருக்குதே மலை போல ஒரு மாடு படுத்திருக்குதாம்" எனப் பாடினார். பக்தனின் அன்பிற்காக எழுந்தருளியிருக்கும் இறைவன் தமது நந்தியைப் நோக்கி "சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்" என பணித்தார். இறைவனின் பணிப்பின் பேரில் கருங்கல்லினாலான நந்தி வழிபட வசதியாகச் சற்று விலகியது. நந்தன் நன்கு கண்ணாரக்கண்டு இறைவன் மீது பாடியும் ஆடியும் பல முறை வீழ்ந்து வணங்கியும் தமது பக்தியை நிலை நாட்டினார்.

## திருக்குளம் அமைத்தது

நந்தன் திருப்புன்கூர் இறைவன் காட்டிய பேரருளால் கவரப்பட்டு இடையறாது சென்று தரிசித்தார். இவ்வாலயத்தின் மேற்கு வெளிவீதியில் தேங்காய் மட்டைகள் ஊறவைக்கும் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளத்தில் ஆலய தரிசனத்திற்காக வருவோர் கால்கள் சுத்தஞ் செய்வதற்காக ஒரு திருக்குளம் தோண்ட முன்வந்தார். இப்பணி செய்யும் பணியாட்கள் போதாதிருந்தது. இப்பணியை நிறைவு செய்யுமாறு இறைவனை வேண்டினார்.

பக்தனின் வேண்டுதலை நோக்கிய இறைவன் விநாயகரை நோக்கி குறிப்பிட்ட திருக்குளத்தை நிறைவாக அமைக்குமாறு கூறினார். இறைவனின் கட்டளையை ஏற்ற விநாயகப் பெருமான் தமது பூதங்களுடன் சென்று அதே இரவில் குறுகிய நேரத்தில் திருக்குள வேலையை நிறைவு செய்திருந்தார். மறுநாட்காலை நந்தனார் அவ்விடஞ் சென்றபோது திக்குள வேலை சிறப்பாக அமைந்ததைக் கண்டார். இறைவன் தன் மீதிருந்த பெருங்கருணை யால் இப்பணி பூர்த்தியானதே என உணர்ந்தார். இறைவனைப் போற்றிப் பாடியும் ஆடியும் பலமுறை வீழ்ந்து வணங்கியும் பிரார்த்தித்தார். இத்திருக்குளம் இன்றும் "ரிஷபதீர்த்தம்" என அழைக்கப்படுகிறது.

## ஒரே இரவில் விளைந்த 40 வேலி வயல்

நந்தனார் மார்கழி மாதம் திருவாதிரை விழாவைத் தரிசிக்க சிதம்பரம் செல்ல வேண்டுமென வேதியரான ஆண்டானிடம் அனுமதி கோரினார். வேதியர் மறுத்ததால் தமது புலைச்சேரி நண்பர்களிடம் சிதம்பரத்திற்கு நாளைக்குப் போவேன் என்று பலமுறை சொல்லியும் நிறைவேறவில்லை. இதனால் நந்தனாரை யாவரும் "திருநாளைப்போவார்" என அழைத்தனர். பலமுறை நந்தன் கோரியதால் வேதியர் கடும் நிபந்தனை விதித்தார்.

தமது நாற்பது வேலி நிலத்தைப் பண்படுத்தி நெல் விதைத்து அறுவடை செய்த பின் போகலாம் என்றார். நந்தனார் தமது இயலாமையையும் திருவாதிரை விழாக்காண வேண்டுமென்பதை யும் உளமாரப் பிரார்த்தித்து இறைவனிடம் விண்ணப்பித்தவர் இறையருளின் பேறாக உறங்கிவிட்டார். இறைவன் தமது சிவ பூத கணங்களை அனுப்பிக் குறிப்பிட்ட நாற்பது வேலி நிலத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடைக்குத் தயாரான நெல் விளைந்திருக்கச் செய்தார். குறிப்பிட்ட நெல் விதைத்து அறுவடை செய்ய மூன்று மாதம் செல்லும் கால நேரத்தை ஒரு குறுகிய இரவு வேளையில் நிறைவு செய்தமை தூய பக்தனின் பக்திச் சிறப்பின் அடையாளமாகும். யாவரும் இறைவனை வியந்தனர்.

இதே இரவு இறைவன் நந்தனின் கனவிற் தோன்றி நாற்பது வேலி நிலத்திலும் நெல் விளைந்துள்ளது. வேதியரிடஞ் சென்று காண்பித்து தில்லைக்கு வருமாறு அருளிச் செய்ததும் மறைந் தருளினார். மறுநாள் விடிந்ததும் நந்தனார் ஓடோடிச் சென்று வயலைப் பார்வையிட்டார். "களை எடாமல் சலம் விடாமல் கதிர் ஒரு முழம் காணுமாம்" என்ற தொடரில் பாடிய மகிழ்ச்சியுடன் வேதியருடன் சென்று வயலைப் பார்க்குமாறு வேண்டினார். வேதியர் இறைவனின் அருளை நோக்காது நந்தனின் கூற்றை மறுத்துச் சினந்தார். இறையருட் சக்தியால் வேதியர் வயலுக்குச் சென்று பார்த்தார்.

வேதியர் நந்தனின் இறைபக்தியின் சிறப்பை உணர்ந்தார். வேதியரான தாம் பெற முடியாத இறையருளை நந்தன் பெற்றமை அவனின் இறையருட் சித்தியெனக் கூறி நந்தனாரை வீழ்ந்து வணங்கித் தமக்கு உபதேசிக்குமாறு வேண்டினார். பின்னர் வேதியர் நந்தனாரைத் தில்லைக்குச் செல்லுமாறு கூறியதும் நந்தன் இறைவனைப் புகழ்ந்து பாடிய வண்ணம் தில்லையை அடைந்தார். ஊரெல்லையில் நின்றே இறைவனைப் பலமுறை வணங்கினார்.

ஆலய வெளிவீதியின் புறத்தே பலமுறை வலம் வந்து வழிபட்டதால் நந்தனார் இறைவனை அருகில் சென்று வழிபட முடியாத கவலையுடன் ஆலய முன்புறத்தில் அமர்ந்ததும் உறங்கி விட்டார். அச்சமயம் நந்தனாரின் கனவிற் தோன்றிய இறைவன் "உனது இப்பிறவி நீங்கத் தீயில் மூழ்கி அந்தணர்களுடன் இணை வாயாக!" என்றருளினார். இறைவனின் கூற்றுப்படி நந்தனார் அந்தணர் களிடம் சென்றார். இறைவன் தில்லைவாழ் அந்தணர்களின் கனவிற் தோன்றி நந்தனாருக்குத் தீயமைத்துத் தருமாறு அருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் பணிப்பை ஏற்ற அந்தணர்கள் தெற்கு வாசல் கோபுரத்திற்கு வெளியே பெருநெருப்பு மூட்டித்தீயை வளர்த்ததும் நந்தனாரை அழைத்து இறைபணியை ஏற்குமாறு கூறினர்.

## நந்தனார் தீயினுட் புகுந்து மறுபிறவியாக எழுந்தது

அச்சமயம் நந்தனார் தீக்குழியை வலம்வந்து நடராசப் பெருமானைப் பிரார்த்தித்தவாறு இரு கைகளையும் தலைமீது வைத்துத் தீயினுட் புகுந்தார். அக்கணமே நந்தனாரின் மாயப் பொய்யுடல் அழிந்தது. அத்திருவுடல் மறையவும் மார்பில் பூணூலும் சடை முடியும் அமைந்த அழகிய புண்ணிய முனிவராகச் சிவ ஒளியுடன் தீயிலிருந்து வெளியே வந்தார்.

அச்சமயம் யாவரும் இறையருளைப் போற்றினர். விண்ணி லிருந்து தேவர்கள் ஆசீர்வாதத்துடன் பூமாரி பொழிந்தனர். தில்லை வாழ் அந்தணர்கள் நந்தனாரைக் கைகூப்பி வணங்கினர். யாவரும் உடன் வர நந்தனார் கோபுர வாசலைக் கடந்து பொன்னம்பலத்துள் நுழைந்து கூத்தர் பிரானின் திருப்பாதங்களில் சங்கமமானார். நந்தனாரை எவரும் பின்னர் காணாதவாறு மறைந்தார். நந்தனாரின் பக்தியை யாவரும் வியந்தனர்.

ஈனப் பிறப்பில் பிறந்தாலும் இறை பக்தியால் இறைபணி யாற்றி பாடல்கள் பாடியும் ஆடியும் இடையறாது தியானித்தும் இறையருள் பெற்றவர் நந்தனார். இறைவனை வேண்டி நந்தியை விலகச் செய்து வழிபட்டவர். தமது சிவப்பணியாக திருப்புன்கூரில் திருக்குளம் அமைத்து இறைபுகழ் பெற்றவர். வேதியரின் 40 வேலி வயல் நிலத்தில் ஒரே இரவில் இறையருளால் நெல் விளையச் செய்தவர். இறைவனின் பேரருளினால் ஈனப்பிறவியைத் தீயில் விட்டு தெய்வீகப் பிறவி போல வெளியே வந்து தில்லைக்கூத்தனின் பாத ஒளியிற் கலந்து நற்பேறு பெற்றுச் சைவ சமயத்தின் 63 நாயன்மாரில் ஒருவராக அமைந்த பேறு பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.திருக்குளத்தைப் புனரமைத்த தண்டியடிகள்

திருவாரூரைப் பிறப்பிடமாகக் கொண்டு சிவநெறியில் சிறப்படைந்த தண்டியடிகள் ஓர் பிறவிக் குருடர். இவர் வாழ்ந்த திருவூரில் பெருமைக்குரிய சிவாலயத்தின் பேரருளால் சிறந்த சிவபக்தரானார். தினமும் இச்சிவாலயத்திற்குச் சென்று திருவைந் தெழுத்தை ஓதிய வண்ணம் வழிபட்டும் வீதிவலம் வந்தும் சிவநெறிக்கு இலக்கணமானார். இவர் சிவபக்தி மேலீட்டினால் அகக்கண்ணினால் யாவற்றையும் கண்டு அனுபவித்தார்.

இவ்வாலயத்தின் மேற்குப்புறத்தே தீர்த்தக்குளம் இருந்தது. முற்காலத்தில் இத்தீர்த்தக் குளத்தின் கரையோரங்களில் சமணர் களின் அழிந்துபோன பள்ளிகளால் குளம் ஒழுங்கீனமாக முடக்கப் பட்டிருந்தது. ஆங்காங்கே மண் திட்டுக்களும் தென்பட்டன. இதனைத் தண்டியடிகள் அகக்கண்ணால் நோக்கினார். இவ்வாறு இடிபாடுகளுடன் காணப்பட்ட மண்திட்டுக்களை அகழ்ந்து வெளி யேற்றினால் தீர்த்தக்குளம் விசாலமாகவும் அழகாகவும் இருக்கு மென உணர்ந்தார். இத்திருத்தொண்டை தாம் செய்து அறப் பணியாற்ற முன்வந்தார். வேண்டிய தளபாடங்களாகக் கூடை மண்வெட்டியுடன் தீர்த்தக்குளக் கரையை நாடினார்.

குளத்தினுள் அகழும் குழியோரத்தில் நிதானமாக அமைப் பதன் பேரில் குறிப்புக் குறியாக ஒரு நெடிய தடியை நாட்டினார். தடியில் ஒரு நீளமான கயிற்றால் கட்டினார். கயிற்றின் மறு முனையை குளத்தின் கரையின் வெளிப்புறத்தில் நாட்டிய வேறொரு கம்பத்தில் இறுக்கமாகக் கட்டினார். இக்கயிற்றினைத் தடவிப் பிடித்துக்கொண்டு வழியறிந்து குளத்திலிறங்கித் திட்டுக்களின் மண்ணை வெட்டும்போது ஓம் “சிவாயநம” என்று திருவைந் தெழுத்தை ஓதிய வண்ணம் வெட்டிய மண்ணைக் கூடையிலிட்டுக் கயிற்றின் உதவியுடன் கரைக்கு வெளியே கொட்டுவார். கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை அற்றாலும் தண்டியடிகளின் சிவபக்தியும் திருவைந்தெழுத் தோதலும் கட்டிய கயிறும் அகக்கண் நோக்கில் குளம் புன ரமைக்கும் தொண்டு தினமும் தாளொருவராகவே நடைபெற்றது.

தண்டியடிகளின் பணியைச் சமணர்கள் கண்டு பொறாமை யுடன் நோக்கினர். அவரை அணுகி மண்ணை வெட்டாதீர். அதனுள் வாழும் உயிரினங்கள் மடியும். அவற்றைத் துன்புறுத்தாதீர். மண்ணை வெட்டுவதால் நீரும் துன்புற வேண்டாம் என்று தடுத்தனர். அச்சமயம் தண்டியடிகள் அவர்களை நோக்கி திருவிலிகாள் சிவபெருமானுக்குச் செய்யும் திருப்பணியே குற்றமற்ற அறப்பணியாகும். இதனை நீவிர் அறிய மாட்டீரே என்றார்.

அது கேட்ட சமணர்கள் நாங்கள் கூறுவதைக் கேட்காவிடில் கண்களை இழந்தது போலக் காதுகளையும் இழந்தீரோ எனக் கூறினர். அச்சமயம் தண்டியடிகள் மந்த உணர்வும், குருட்டுக் கண்ணும், செவிட்டுக் காதும் உங்களுக்கே உரியன. திரிபுரத்தை எரித்த விரிசடைக் கடவுளின் திருவடிகளைத் தவிர வேறொன்றையும் பார்க்க மாட்டேன். இந்த உலகில் நிலையற்ற வாழ்வில் நீங்கள் உணர்வும் கண்ணும் இழந்துபோக இறையருளினால் நான் கண்ணொளி பெற்றால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்றார்.

அது கேட்டதும் கொடிய சமணர்கள் தண்டியடிகளின் கூடையைப் பறித்தெறிந்து மண்வெட்டியையும் தூர வீசிவிட்டு அவர் நாட்டிய தடிகளையும் வெட்டிக் கயிற்றையும் தூர வீசினர். அச்சமயம் சமணர்கள் பலர் மத்தியில் தனியொருவர் செய்வதறியாது எம்பெருமானின் ஆலய முன்றலில் சமணர்களின் அடாத செயலைக் கூறி இதனைத் தீர்த்து வைக்குமாறு வேண்டினார். பின்னர் எதிரிலிருந்த மடத்திற்குச் சென்று தான் திருத்தொண்டு செய்ய இயலாததையும் கூறி அழுத வண்ணம் உறங்கிவிட்டார்.

அன்றிரவு இறைவன் தண்டியடிகளின் கனவிற் தோன்றி உன் கண்ணால் சமணர்களின் கண்கள் பறிபோவதைக் காண்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் அஞ்ச வேண்டாம் என்று கூறி மறைந்தருளினார். அன்றிரவே இறைவன் சோழ மன்னனின் கனவிற் தோன்றித் தமது பக்தன் தண்டியடிகள் திருக்குளத் தொண்டு செய்யும்போது சமணர்கள் இடையூறு செய்தனர். இதனை நன்கறிந்து விசாரணை செய்யுமாறு கூறியதும் மறைந்தருளினார்.

மறுநாட் காலை அரசன் விழித்தெழுந்ததும் இறைவனை வணங்கி விட்டுத் தண்டியடிகளிடஞ் சென்றான். தண்டியடிகள் நடந்தவற்றைக் கூறினார். மன்னன் தண்டியடிகளைக் குளத்தடிக்கு அழைத்துச் சென்று சமணர்களையும் அழைப்பித்தான். மன்னன் தண்டியடிகளை நோக்கி சிவநேசரே சிவபெருமானால் கண்ணொளி பெறுதலைக் காட்டுக என்றான்.

தண்டியடிகள் குளத்தின் முன்னின்று "நான் சிவபெருமானுக்கே தொண்டு செய்வது உண்மையானால் அரசனின் முன்னே நான் கண்ணொளி பெறவும் இச்சமணர்கள் கண் இழக்கவும் இறைவன் அருள் புரிவான் என்று கூறினார். தண்டியடிகள் திருவைந்தெழுத்தை ஓதியவாறு குளத்தில் மூழ்கி எழுந்த போது கண் பார்வையும் கிடைத்தது. வானவர்கள் மலர் மாரி பொழிந்தனர். சமணர்கள் யாவரும் கண்பார்வையை இழந்தனர். மன்னன் தமது காவலர்கள் மூலம் சமணர்கள் யாவரையும் திருவாரூரிலிருந்து அகற்றினான். மன்னன் திருவாரூரிலுள்ள சமணர்களின் பள்ளியையும் இடிப்பித்தான். தண்டியடிகளை வாழ்த்தி விடைபெற்றான்.

தண்டியடிகள் இறைவன் தமக்குதவிய பேரருளை வியந்து தலையாரக் கும்பிட்டார். தனக்கு அருள் புரிந்த இறைவனின் திருவைந்தெழுத்தை ஓதிய வண்ணம் இறைவனின் திருக்குளப் பணியை நிறைவு செய்தார். கண் பார்வையற்றாலும் சிவப்பணியை நிலைநாட்டிய தண்டியடிகள் 63 நாயன்மார் வரிசையில் இடம் பெற்றார். இறைவனின் திருத்தொண்டு செய்து மனநிறைவுடன் இறைவனடி சேர்ந்தார். இறைபணியாற்றும் தொண்டர் தம் பெருமையைச் சிந்திப்பதும் சிவப்பணியாகும். தெய்வீக அன்பே சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் முன்னைய ஆக்கங்கள்


| | | |
|---|---|---|
| 1. | அறநெறிக்களஞ்சியம் ........................ | 2003 |
| 2. | சீரிணுவைத் திருவூர் ........................ | 2004 |
| 3. | திருமுறைத் தோத்திரப் பாடல்கள் ........................ | 2005 |
| 4. | இல்லஞ் சிறந்திட வாழ்க! ........................ | 2007 |
| 5. | இறையருட் செல்வர்கள் ........................ | 2007 |
| 6. | சிவகாமி அறநெறிப்பாடசாலை 10ஆம் ஆண்டு மலர் ........................ | 2007 |
| 7. | மழலைச் செல்வங்கள் ........................ | 2008 |
| 8. | ஈழத்துச் சக்தியின் அற்புதங்கள் ........................ | 2009 |
| 9. | ஐயப்பன் வழிபாடு ........................ | 2009 |
| 10. | பிள்ளைக்கனி அமுது ........................ | 2010 |
| 11. | தேவிபாகவதக் கதைகள் ........................ | 2011 |
| 12. | யாழ் மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள் ........................ | 2012 |
| 13. | கலைஞானசுரபி ........................ | 2012 |
| 14. | திருமுறைப் பாடல்கள் ........................ | 2012 |
| 15. | அருள்ஞானதீபம் ........................ | 2013 |
| 16. | இணையிலி ........................ | 2013 |
| 17. | உதயதாரகை ........................ | 2014 |
| 18. | இறையருள் அமுதம் ........................ | 2014 |
| 19. | நல்லூர் கந்தசுவாமி கோயில் ........................ | 2016 |
| 20. | கிராமிய மண்ணில் முருகன் ஆலயங்கள் மூன்று ........................ | 2016 |
| 21. | வித்தக விநாயகர் ........................ | 2017 |
| 22. | ஔவைமொழி ........................ | 2017 |
| 23. | ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் ........................ | 2017 |
| 24. | பெண் எனும் மகாசக்தி ........................ | 2017 |
| 25. | உலகப்பெருமஞ்சம் நிறுவிய இணுவில் பெரியசந்நியாசியாரின் 101ஆம் ஆண்டு மலர் .................... | 2018 |
| 26. | பஜனைப்பாவலர் - தியாகராஜ சுவாமிகள் ........................ | 2018 |
| 27. | தமிழ்வேதத்தின் வித்தான நால்வர் நற்றமிழ் (சம்பந்தர்)...... | 2018 |
| 28. | தமிழ்வேதத்தின் வித்தான நால்வர் நற்றமிழ் (நாவுக்கரசர்).. | 2018 |
| 29. | சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலமும் ............... | 2019 |
| 30. | எம் முன்னோரின் வாழ்வாதாரமும் மருத்துவமும் ............ | 2020 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்**
**2020ஆம் ஆண்டின் சிறந்த நூற் பரிசுத் தேர்வில்**
**(ஆன்மீகம்)**
**நூலாசிரியர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**
**அவர்களுக்கு**
**"சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலமும்"**
**என்ற நூலுக்காக வழங்கப்பெற்ற விருது**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










சுடர்நிலவு, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org